298

No. M. 2210 வருஷ சந்தா ரூ. 1 8 0

ஆசிரியர் : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

JAGANMOHINI

மலர் V.] [இதழ் I.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1928.
MADRAS

தனிப் பிரதி அணா 3.

ஜ
ஞ211,N22J௱.
N27.5.1
182841

ஜகன்மோகினி ஆபீஸ்.

26, தோடித் தெரு, :: திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

"ஜகன்மோகினி"யின் ஐந்தாவதாண்டின் கொண்டாட்டம்,

பரிசுகள்.

சென்ற 11-12-வது சஞ்சிகையில் தெரிவித்தபடி பரிசுகள் அடியில் கண்டவர்களுக்கு விழுந்திருக்கின்றன.

பரிசு.	ரூ.	சந்தா நெ.	
1-வது	25	1150	ஸ்ரீமதி. கல்யாணியம்மாள், ஹைதராபாத்.
2. ,,	15	1579	Mr. ம. ஒலிமகம்மது, சிங்கபுரி.
3. ,,	10	1446	ஸ்ரீமதி. D. ஜானகியம்மாள், திருப்பதி.
4. ,,	5	2085	ஸ்ரீமான். ராகவபட்டாசாரியார், நெம்பிலி.
5. ,,	5	1105	Mr. V. முருகன், Tongaat. Natal.
6. ,,	5	1120	Mr. N. Kunjithapatham Iyer, B.A. B.L., Mylapore, Madras.

மேற்படியாருக்குச் சேரவேண்டிய தொகைக்கு வேண்டிய புத்தகங்களின் விவரமோ அல்லது பணமாக அனுப்பவேண்டுமென்பதையோ தெரிவித்தால் அதன்படி அனுப்பப்படும்.

நமது பழைய சந்தாநேயர்களில் அநேகர் கடிதமெழுதுவதாவது,— டிசம்பர் மாதம் 20-ந் தேதிக்குள் என்ற தவணை வைத்திருப்பதால் அதற்குள் தமக்குச் செலுத்த சந்தர்ப்பமில்லை என்றும், பின்னர் தாம் செலுத்துவதாயும் தமது பெயரையும் பரிசு போட்டியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் சிலரும், சிலர் சென்னைக்குக் காங்கிரஸ்காட்சிக்கு வரப்போவதாயும் அப்போது நேரில் சந்தாவைச் செலுத்துவதாயும் அதற்கப்புறம் பரிசை ஒருமாதம் தள்ளிப்போட வேண்டுமென்றும் கேட்டு எழுதியிருக்கிறார்கள். நாம் ஏற்கெனவே நமது சந்தா நேயர்களுக்குத் தெரிவித்த வார்த்தையை மாற்றுவது கூடாதென்ற நோக்கத்தினால் நாம் முன் சொல்லியபடியே பரிசுகளைப் போட்டுவிட்டோம். ஆயினும் கடிதமெழுதியவர்களின் இஷ்டப்படி அவர்களையும், 2-வது சஞ்சிகை வெளி வருவதற்குள் சந்தாதாரராய்ச் சேர்ந்து உதவி புரிபவர்களையும் சேர்த்து அவர்கள் பெயர்களைக் குலுக்கிப் போட்டுப் பரிசுகள் அடியில் வருமாறு கொடுக்கப்படும்.

1-வது பரிசு	...	ரூ. 15.
2-வது ,,	...	ரூ. 10.
3-வது ,,	...	ரூ. 5.
4-வது ,,	...	ரூ. 5.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித்தெரு,
திருவல்லிக்கேணி.

ஓம்

ஜகன் மோகினி

ஜயணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்கு
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

மலர்	பிரபவஹு மார்கழிமீ	இதழ்
V	December 1927.	1

OFFICE OF THE REGISTRAR
9-JAN 1928
MADRAS

கடவுள் வணக்கம்

(1) தொண்டரருந்தும் மருந்து பெரும் தூயர்க்கும் நேயர்க்கும் தோன்றா மருந்து,—அண்டருங் காணாமருந்து அரன் ஆநந்த தாண்டவங் காட்டு மருந்து.

(2) பற்றையொழிக்கு மருந்து பவபந்தந்தொலைக்கும் பழையமருந்து, நற்றவர் நாடுமருந்து நல்ல ஞானமும் போகமும் நல்கும் மருந்து.

(3) உண்ணத் தெவிட்டாமருந்து புறக்கண்ணிற்குங் காக்ஷி கொடுக்கு மருந்து,—எண்ணில் இனிக்கு மருந்து என்னுள் என்றும் இருந்தொளி வீசும் மருந்து.

(4) கருணாரசமாம் மருந்து தன்னை கருதிடபாவங்கள் போக்கும் மருந்து,—ச்ரவணாநந்தமா மருந்து நாளும் சிந்தித்திடில் பலனீயும் மருந்து.

(5) வாகனத்தேறும் மருந்து மங்கைபாகனும் போற்றிப் பணியு மருந்து,—சாகரவாச மருந்து உயர் ஆகமவேத புராணமருந்து.

(6) தேரோட்டி நின்றமருந்து அதுபார் புகழ்கீதை பகர்ந்த மருந்து,— கூர்விழிகொண்ட மருந்து பெருங்குன்றை எடுத்துயிர் காத்தமருந்து.

(7) ஸகஸ்திர நாமமருந்து என்றும் சாதிகள் பாராத சமத்வமருந்து,— ஜகமெல்லாம் போற்றும் மருந்து எமக்கிக பரமிரண்டிற்கும் ஏற்றமருந்து.

(8) ஞானக்கண்ணான மருந்து அதைஞாலத்தவர்க்கருளும் நல்லமருந்து,— தயானத்திற்கேற்ற மருந்து அதி தினமை ரக்ஷிக்கும் திவ்ய மருந்து.

(9) ஆதியந்தமில்ல மருந்து அதன் பாதம் பணிவோரைப் பேணும் மருந்து,—சீதா நாமமருந்து உண்ணச்சீரும் சிறப்பும் அளிக்கும் மருந்து.

(10) கைப்பாகத்தாகா மருந்து தானே மெய்ப்பாகமான சுயம்பு மருந்து,—தப்பாத வன்மை மருந்து நூலில் செப்பாத வாகடத்தூய மருந்து.

(தொடரும்)

வை. மு. கோ.

அநுபவ நீதிசாரம்.

1. கடவுளிடத்தில் நீ உனது சுத்தமான அன்பைத் தவிர இதர பொருள்களைச் சமர்ப்பிப்பதனால் சிறப்பில்லை.

2. பிறரை முன்பின்னறியாது உனது மேலான அன்பை வைத்து ஏமாறாதே.

3. புறங்கூறுதலும், ஒட்டுக் கேட்பதும், மறைந்துப் பார்ப்பதுமான துற்குணங்களுடைய மனிதரை அவர்கள் விழியின் பார்வையிலிருந்து தெரிந்து கொள்வதுதான் உனது திறமை.

4. நீ ஒருவரை நம்பலாம். ஆனால் அவர் உன்னை நம்புவார் என்று எதிர்பார்ப்பது மடமையாகும்.

5. நம்பி மோசம் போவதைவிட நம்பாது துவேஷங் கொள்வது சிலாக்யம்.

6. உண்மைக் காதலற்ற தம்பதிகளின் வாழ்வு புண்ணினும் கொடிது.

7. மணந்த கணவனை மகிழ்விக்க மனமற்ற மங்கையின் உதவியை மற்றவர் நாடுவது என்னே விந்தை!

8. முகமலர்ச்சியாகப் புகழும் வஞ்சகரை அகமகிழக் கூறுவதாக எண்ணாதே.

9. சிலர் நடக்கும்போது தலைகுனிந்திருப்பினும் விழியானது ஊர்முற்றும் சுற்றியவாறிருக்கும். அத்தகையவரிடத்தில் எச்சரிக்கையாகவிரு.

10. தனது சொந்த ஜோலியை விடுத்துப் பிறர் செல்லுமிடத்தையும் சொல்லும் வார்த்தையையும் கவனிக்க முன்வரும் மனிதரின் எண்ணத்தை அவர்களின் செயலே காட்டி விடுகிறது.

11. ஒரு காரியவாதியின் வேலையைக் கண்ட மனிதன் "நான் செய்வதுபோலத்தான் செய்திருக்கிறாய்." என்று சொல்பவனிடத்தில் உண்மையில் அவன் அவ்வேலையைச் செய்யும் திறமிருப்பின் இவ்விதம் விளம்பரம் செய்யமாட்டான்.

12. தின்பண்டத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஒருவர் பிறரைக் கண்டு "இந்த பக்ஷணம் வேணுமா?" என்று அவர்கள் கேட்பதிலிருந்தே அதைக் கொடுக்க இஷ்டமில்லை என்பது விளங்கவில்லையா?

(தொடரும்) வை. மு. கோ.

ஹாஸ்யம்.

எச்சிபாட்டி:—அடி ருக்மணி! அப்பொழுது பிடித்து நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பாடும் பாடும் என்று நினைத்தேன். நேற்று கோமளம் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவளும் இதைப்போல் எதையோ அமுக்கிக் கொண்டிருந்தாள். அது பாடினது.. இது ஏன் பாடவில்லை? கெட்டுவிட்டதா?

ருக்மிணி:—பாட்டீ! அது ஹார்மோனியம். அதனால் பாடிற்று. இது [illegible]ப்பவன்: இது பாடாது. ஏதாவது எழுதவேண்டுமானால் இதில் அடித்தால் எழுதும். இதில் எழுத்துதான் இருக்கின்றது. சங்கீதமில்லை.

பாட்டீ:—ஆனால் என் தலையெழுத்து இதிலிருக்கின்றதா சொல்லேன்.

ருக்மிணி:—(நகைத்து) இதில் தலையெழுத்து இல்லை. சாதாரண எழுத்துக்களை தான் அச்சடிக்க முடியும்.

Srinivasan
132841

"ராமுலு" புதிய ஸங்கீத புத்தகங்கள்

ஸங்கீத ஸாஹித்ய பரத சாஸ்திர வித்வான் ப்ரஹ்மஸ்ரீ. கெ. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களால் எமது வேண்டுகோளுக்கிணங்க அனேக சீர்திருத்தங்களுடன் புதியதாய் தயாரிக்கப்பட்ட அரிய புத்தகங்கள்.

1. ஸங்கீத சிந்தாமணி ரூபா 3.
2. திராவிட கானம் ரூபா 3.
3. ஸங்கீத சில்லரைக் கோர்வை ரூபா 3.

இவ்வரிய புத்தகங்கள் இதுவரையிலும் ஸங்கீத உலகத்திற்குத் தெளிவாய்க் கிடைக்காத அனேக விஷயங்களையும் அரிய பெரிய பாட்டுகளையும் வழங்கவல்லதென்றால், இப்புத்தகங்கள் ஸங்கீத வித்வான்கட்கும், ஸங்கீதாபிமானிகட்கும், ஸங்கீத உபாத்தியாயர்கட்கும், வித்தியார்த்திகட்கும் ஒரு பெரிய நிதியாகுமென்பதை நாங்கள் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

குறிப்பு:—மேற்குறித்த மூன்றுபுத்தகங்களில் அடங்கி இருக்கும் கீர்த்தனைகளின் அட்டவணை, விலாசம் தெரியப்படுத்தினால் இனமாய் அனுப்பப்படும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி, ஸங்கீத புத்தக பிரசுரகர்கள்,

10, கல்மண்டபம் ரோட், (போலீஸ் ஸ்டேஷன் சமீபம்) இராயபுரம், மதராஸ்.

நாவல் உலகத்தின் ஒப்பற்ற ஒளி

ஸ்ரீ லேலாலன்

துப்பறியும் செந்தமிழ் நாவல்

விலை ரூபாய் 1-4-0

தேர்ந்த நீதிகளும், ஆழ்ந்த கருத்துகளும், சுவைதரும் சொற் போக்கும், திடுக்கிடும் நிகழ்ச்சிகளும், நகைதரும் நடிப்பும், பலன் தரும் பாக்களும், துப்பறியும் பொருட்டு, இதில்நிகழும் அத்யாச்சர் யகரமான தந்திர சாமர்த்தியங்களும், அபாரத் திருட்டும், அநீதக்கொலையும், ஒருங்கு சேர்ந்து ஒன்றைவிட ஒன்று தலை சிறந்து தோன்றிப் படிப்போர் மனதைப் பரவசப் படுத்தவல்ல, அரிய பெரிய துப்பறியும், புதிய நவீன நாவல்.

புத்தகம் அச்சிலிருக்கும் போதே இரண்டு வெளியூர் வியாபாரிகள் 500 புஸ்தகத்திற்கு முன்பணம் தந்து ஆர்டர் செய்திருக்கிறார்களென்றால் இதன் பெருமையை விளக்கவும் வேண்டுமோ? ஆகையால் நண்பர்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

நாவலின் அத்தியாய அட்டவணை.

1. வறுமையிற் செம்மை.
2. கற்றவர் காய்வது காமனையே!
3. குடிப்பிறந்தாள் தன்னோடு கூடுதல் கோடிபெறும்.
4. அறிவார்யார் நல்லாள் பிறக்குங்குடி?
5. ஐந்து கோடி ரூபாயும் அரியபொருளும்.
6. ஒரு ரோமம் போனாலும் கவரிமான் வாழாது.
7. துப்பறியும் ஞானானந்த சாமியார்.
8. யானைக்கு மடிசரக்கும்.
9. ஒன்றை நினைக்கி னதுஒழிந்திட் டொன்றாகும்.
10. வாசம் வீசும் வசந்த காலம்.

முதற் பதிப்பாக சொற்பக் காபிகளே அச்சாவதாலும், மறு பதிப்பு வெளிவர பல மாதங்களாகு மாகையாலும், புஸ்தகத்திற்கு முந்திக் கொள்ளுங்கள்.

மதுரைக்கும் வெளி நாட்டிற்கும் ஏஜன்ட்டுகள் தேவை.

T. S. ராஜம் & சன்,

காஞ்சீபுரம்,

இனாம் ! இனாம் !

முற்றிலும் இனாம் !

'C' ரிஜிஸ்டர் ! 'C' ரிஜிஸ்டர் !

டைம்பீஸ் டைம்பீஸ்



இனாம். இனாம்.

எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.

ஒரு மாதம்

பாதிவிலை ! பாதிவிலை !

வரையிலும்

அசல் விலைரூபாய் 14.

பாதி விலை 7



22 காரட் ரோல்டு கோல்டு கைகெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதிவிலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்.

தபால் நெ. 508, பி, டி, மதராஸ்.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கேட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-8-0 2-வது ரகம் ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர்கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி; கறைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார், முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கோட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்

குறிப்பு—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபா சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு

பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினல் ரிஜிஸ்ட்ரேஷன் கூலிசேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "**கிருஷிகன்**" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை

இனம்! 1928 காலண்டர் இனம்!!

தபால் செலவுக்கு 3 அணு ஸ்டாம்பு அனுப்புவோருக்கு இங்கிலீஷ் தமிழ் தேதியுள்ள 12 ஷீட் வால் கியாலண்டர் 2 இனமாக அனுப்பப்படும்.

எங்களிடம் எல்லாவித புத்தகங்களும் கிடைக்கும். தங்களுக்கு வேண்டிய எவ்வித புத்தகங்களுக்கும், டைரிகளுக்கும், காலண்டர்களுக்கும் எங்களுக்கே எழுதுங்கள்.

விலாசம் :—

மெய்கண்ட விலாச புத்தகசாலை,
விருதுநகர்

"ஜகன்மோகினி"யில்
வெளிவந்த நாவல்கள்

மலர் I. ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார்

எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

கனக சபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	12	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை.

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2 பாகங்கள்)	ரூ.	2	8	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தோடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை.

இதர தமிழ் நாவல்கள்

சரோஜனி	ரூ.	2	0	0
மதனசிங்கர் அல்லது உரிமையிழந்த சீமான்	ரூ.	1	4	0
சுந்தரவதனி அல்லது தர்மமே ஜயமளிக்கும்	ரூ.	0	12	0
வஸந்த சமுத்திரம் அல்லது இரண்டு ஜகன்மோகினிகள்	ரூ.	0	12	0
விஷதாரி அல்லது சர் மதன்கோபாலரின் மர்மம்	ரூ.	1	4	0
ரோஜாலி அல்லது ஒரு தீவின் அரசி	ரூ.	0	12	0
மர்மமுகி அல்லது ரஸாயனக் கள்ளன்	ரூ.	0	12	0

Mr. வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா எழுதியவை.

அமிர்தமாலினி	0	4	0	நிஜப்புருகன் அல்லது ராவ்பகதூர் ரஸகுல்லாசாகிப்	0	2	0
போலீஸ் கிலிபொதிராயர்	0	1	0				
				பூஜாபாகவதம்	0	1	0

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி.

ராதாமணி

வை மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியது

பிரசுரிப்பவர்கள் :

"ஜகன் மோகினி" ஆபீஸ்

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

உரிமையுரை

"ராதாமணி" என்னும் பெயரமைந்த இந்த நூலை "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் ஆன்றோர் வாக்கின்படி பிரத்யக்ஷ தெய்வங்களாகிய எனது ஆருயிர் மாதா பிதாக்கள் நீ. ல. வெங்கடாசாரியர், அலர்மேல் மங்கையம்மாள் என்பவரது திருவடித்தாமரைகளுக்கே சமர்ப்பிக்கிறேன்.

வை மு. கோதைநாயகி

விண்ணப்பம்

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே !

வெண்ணெயுண்ட வாயனுகிய கண்ணனின் கருணையையும் தங்களின் அன்பார்ந்த ஆதரவையும் பெற்றுள்ள ஜகன்மோகினியின் ஐந்தாவதாண்டில் அது தன்குழவியாகிய ராதாமணியை முன் தாங்கி வருகிறது. முன்னர் வெளிப்போந்த வைதேகி, பத்மசுந்தரன் ஆகிய இருகுழவிகளையும் தாங்கள் ப்ரீதியுடன் ஆதரித்ததுபோல் இதனையும் ஆதரிப்பீர்களென்று ஏதோ எனது சிற்றறிவுக் கெட்டியவாறு வரைந்து விடுக்கலாயினேன்.

கடவுளால் படைக்கப்பட்ட உலகத்திலுள்ள பயிர்களுக்கு மாரியே பிரதானமாகும். மனித உலகத்தின்மத்தியில் நவீன நாவல்கள் என்னும் பயிர்களுக்கு மனிதரது பேரன்புடன் உண்டாகும் ஆதரவென்னும் மாரியேஇன்றியமையாத தென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் அறிவாளிகளாகிய தங்களுக்கு அடியாள் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுவது ஒன்றுமில்லை.

இந்நூலிற் காணும் பிழைகளைப் பொறுத்து எடுத்த கருமம் இனிது முடிய மனமிரங்க வேண்டுகிறேன்.

தங்கள் சகோதரி

வை. மு. கோதை நாயகி

"சுதேசமித்திரன்"

மதிப்புரை

(1-12-27)

"சண்பக விஜயம்"

எழுதுவதில் அனுபவம் வாய்ந்த ஸ்ரீமதி கோதை நாயகி அம்மாள் எழுதிய சண்பக விஜயம் என்னும் நவீனகம் வரப் பெற்றோம். நவீனகங்களுக்குப் பொதுவாய் இன்றியமையாததாகக் கருதப்படும் சிருங்காரரஸம் மாத்திரமேயல்லாமல் நவரஸங்களுள் மற்றரஸங்களையுமுடையதாய், ஆங்காங்கு நற்குண நன்னடத்தை முதலியவைகளை விஸ்தாரமாய் எடுத்துக்கூறி விளக்கியும், சமயம் கிடைக்கும்போதெல்லாம் செய்யுள் மேற்கோள் கூறியும், படங்களடங்கியதாயும் இது இருக்கிறது. இதில் கதாநாயகிகளான சண்பகமும் விஜயமும் பல கஷ்டங்களுக்குள்ளாக வேண்டியிருந்தும் பொறுமையோடு நெடுகலும் இருந்து வந்ததும் கடைசியில் சுகமடைந்ததும், விஜயத்தைக் கஷ்டப்படுத்திய மாமி, நாத்தி புத்தி தோன்றிச் சரியாய் நடந்ததும் படிப்பதற்கு இனிமையாயிருக்கும். புத்தகம் 310 பக்கங்களுக்கு அதிக முடையது. அச்சு தெளிவாயும் பெரிதாயுமிருப்பது படிப்பதற்குச்சுலபமாயிருக்கிறது.

உ

ஸ்ரீ

ராதாமணி

வாணி துதி

சதுர்முகன் மகிழும் ஸரஸ்வதி யேயுன்
பதமலர் போற்றிப் பணிந்தேன் இரங்கி
அபய மளித்தருள் அபலை ராதா
மணியெனும் நூல்நல் வளம்பெறு மாறே

விநாயகர் துதி

கானகந் தன்னில் ஆனையாய்த் தோன்றி,
கந்தவேள் உவந்து கன்னியாம் வள்ளியை
கடிமணங் கொள்ளக் கருணை புரிந்த
கணநா யகவுன் கழலிணை பணிந்தேன்
பாங்குட னிந்நூல் ஓங்கிட அருள்வாய்

1-வது அதிகாரம்

கலியாணவைபவம்—காதலரின் பரிபவம்

“பிராணகாந்தா! தங்களுடைய பிடிவாதம் இவ்வொன்றில் மட்டும் இல்லாதிருத்தல் மிக்க நலமாகும். தங்களுடைய அடிமையாகிய யான் தமக்குக் கூறுவதென்பது தகுமோ? எவ்விதமேனும் தயைகூர்ந்து அடியாள் செய்யும் விண்ணப்பத்திற்குச் செவி சாய்க்கவேண்டும். இத்தகைய விஷயத்திற்கெல்லாம் பிறர் உங்களை எதுவும் கூறமாட்டார்கள்; என்னைத்தான் சொல்வார்கள். பிறர் ஒரு பேச்சுக் கூறும்படியாக நாம் நடப்பது அழகாமோ? தங்களுடைய பிடிவாதத்தை விடுங்கள்” என்று சுமார் முப்பது முப்பத்திரண்டு வயது மதிக்கக்கூடியவளும் நல்ல எழில்வாய்ந்தவளுமான ஒரு மாது தனக்கெதிரே சாய்மான நாற்காலி யொன்றில் கோபக் குறியுடன் படுத்திருக்கும் தன் நாதனைப் பார்த்துக் கூறினள்.

இதைக் கேட்ட அவள் நாதன் சற்று கடுத்த முகத்துடன் பேசத்தொடங்கி "ருக்மிணி! உனக்கு நான் எத்தனை தரம் கூறியும் நீ உனது தோரணையிலேயே பேசுகின்றாய். அதிகம் கூறினால் உனக்குக் கோபம் வருகிறது. உன் வேலையைப் பார்த்துக் கொண்டு செல்வாய். எனக்கு அவ்விஷயத்தைப்பற்றிக் கூற வேண்டாம்" என்றார்.

ருக்மிணி:—நாதா! கூறாமலிருப்பதற்கு என் மனம் சம்மதிக்க வில்லையே! நமக்கிருக்கும் அருமை மகன் நரசிம்மனின் அக்ஷராப்பியாசத்திற்கு நமது அக்காள் வாராமல் இருப்பது தகுமோ? அவர்கள் இவ்வீட்டின் மகளல்லவா? வீட்டுப் பெண்ணை விலக்கி விட்டுச் சுபம் செய்தால் அது நன்றாக இருக்குமோ? பிறர் நம்மை என்ன சொல்வார் என்பதை நாம் கவனிக்கவேண்டாமா? அந்தரங்கத்தில் ஆயிரம் மனஸ்தாபமிருப்பினும் அதனை வெளியாருக்குக் காட்டிக் கொடுக்கலாகுமா? என்ன துவேஷமிருப்பினும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் நமது கடமையைச் செய்து தீரவேண்டாமா? "குற்றம்பார்க்கில் சுற்றமில்லை" என்பது தெரியாதா? எத்தனை தான் கோபமிருந்தபோதிலும் அவர்கள் உங்களுடன் பிறந்த சகோதரியல்லவா? அவர்களை நீக்கிவிட்டு நாம் நமது வீட்டில் மேளமடிப்பது சற்றும் பொருந்தாது. நாதா! தாங்கள் எவ்விதமேனும் தமது சோதரியாரை நேரில் சென்று அழைத்துத்தான் தீரவேண்டும். என்னை எத்தனை திட்டியபோதிலும் நான் இதைச் சொல்லாதிருக்க முடியாது. தாங்கள் நேரில் வரும்படியாக ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள். அதுவே போதுமானது. அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் உங்கள் மேல் பழியில்லையல்லவா!—என்று இவள் கூறி முடிக்குமுன் கண்ணபிரான் என்னும் அந்த மனிதன் சற்று ஆத்திரத்துடன் பேசத்தொடங்கி, "ருக்மிணி! உனக்கு நான் எத்தனை தரம் கூறினும் கேட்கமாட்டாயா? அந்தப் பேச்சைத்தவிர வேறு எந்த வார்த்தையேனும் சொல் கேட்கிறேன். அக்ஷராப்பியாசத்திற்கு ஆகவேண்டிய காரியங்களையும் அதன் முஸ்தீப்புகளையும் விரிவாகக் கூறு. அதைச் செய்ய ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

ருக்மிணி:—என்ன இது, தாங்கள் பேசுவதே பேச்சாக ஆய்விடுமோ? அக்ஷராப்பியாசத்திற்கு ஆகவேண்டிய காரியங்களில் முதல் காரியத்தைத் தானே நான் சொன்னேன். முதலில் வீட்டு மகளாகிய தங்கள் தமக்கையார் வந்து சேர்ந்தால் மற்ற முஸ்தீப்புக்களை அவர்களே சொல்லிவிடுகிறார்கள். முதல் காரியம் கோணலானால் முற்றும் கோணல் என்பார்களே! தாங்கள் முதல் வேலைக்கே முரட்டுத்தனம் செய்தால் மற்றைய வேலைகள் எவ்விதமாகும்? வீட்டுப் பெண் வாராமல் அன்னியரான உறவினர்கள்

வருவார்களா? 'சொந்தக்காரியே விலகியிருக்க எங்களுக்கென்ன வேலை?' என்று அவர்கள் பரிகாசமாகச் சொல்வதற்கு இடம் நாமே கொடுக்கலாகுமா? நாம் அழைத்தும் பின்னால் வராவிட்டால் அது நமக்குக் கௌரவமேயன்றி இளப்பமில்லை பாருங்கள். தாங்கள் பிடிவாதம் செய்தால் பின்னர் எல்லாம் பலவிதத்திலும் கஷ்டமாக முடியும் என்பதைக் கூறவேண்டுமா! இப்பொழுது அழைப்பதற்கு மறுக்கின்றீர்களே! புதல்வி ராஜேஸ்வரி உங்கள் சோதரியின் புதல்வனான தாமோதரனையே விவாகம் செய்துகொள்ள விரும்பி அதே உறுதியாக இருக்கின்றாளே. அதை எவ்விதம் முடிப்பீர்கள்? குழந்தையின் க்ஷேமத்தைக் கோருகிறவர்களாக நம்மைத்தவிர வேறு யார் இருக்கின்றார்கள்? நாம் இப்போது அலக்ஷியமாக இருந்து பின்னர் விவாக காலத்தில் மட்டும் குலாவினால் பிறர் பரிகசிக்க மாட்டார்களா? வீட்டில் நாம் எந்தச் சுபம் செய்த போதிலும் முதலில் பூவாடை(சுமங்கலிப் பிரார்த்தனை)கும்பிட்டல்லவா பிறகு மணையில் குழந்தையை உட்கார வைக்கவேண்டும். வீட்டில் பிறந்த பெண்ணுக்கல்லவா அது செய்யவேண்டும்? நாதா! வேண்டாம்; வேண்டாம்: த்வேஷத்தை அடக்கிக் கொண்டு புறப்படுங்கள். நாம் உடனே சென்று அழைத்துவிட்டு வருவோம். எழுந்திருங்கள்—என்றாள்.

கண்ணபிரான்:—ஏதேது நீ விடுவதாகத் தோன்றவில்லை. ஒன்றுடன் இன்னும் பலமான செய்தியையும் கலந்து பேசுகிறாய். மருத்துவர்கள் தந்திரமாகக் கசப்பு மருந்தைத்தேன்விட்டுக்கலந்து உண்பிப்பதுபோல் நீ 'அக்ஷராப்யாசத்திற்கு அழைக்கவேண்டாமா?' என்று மேலே பேச்சுவிட்டு ராஜேஸ்வரியின் திருமணத்தைப் பற்றியும் பேச ஆரம்பித்து விட்டாயே? உம். என் செல்வியை நான் தாமோதரனுக்குக் கொடுத்து மணம் செய்வேனென்று எண்ணாதே. என் ஆத்திரத்தைக் கிளப்பாதே. உன் வேலையைக் கவனித்துக் கொண்டு போ. என்னை வருத்தவேண்டாம். அவ்விடம் சென்று அழைக்க உனக்கும் அனுமதி தந்திருக்கலாகாது. அதற்கிடம் கொடுத்ததால் என்னையும் இழுத்துத் தொந்தரை செய்கின்றாயா! உன்னைக் கடிந்து கோபிக்கவும் மனம் வரவில்லை. ருக்மிணீ! சென்று வேலையைக் கவனி. இனிமேல் என் பொறுமையை இழக்கநேரும்; பேசாமற் போய்விடு—என்றுசற்று உரத்த குரலிலேயே சொன்னார். இதுகேட்ட பாவை எதுவும்பேசாமல் சற்றுத் தியங்கி நின்று பின் அவ்விடத்தை விட்டு உள்ளே போய்விட்டாள்.

இவர்களுடைய சம்பாஷணைகளை மறைந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த ராஜேஸ்வரி என்னும் மடந்தை சிரித்த வதனத்துடன் தன் தாயின் எதிரே வந்து வணங்கி "அம்மா! தங்

களுடைய கடைசி பிரயத்தனமும் தீர்ந்துவிட்டது. இனி என்ன செய்வீர்கள்? அப்பா இணங்கமாட்டார் என்று நான் கூறவில்லையா! அவர்களுடைய மன உறுதியை மாற்றவல்லவன் ஈசன் ஒருவன் தான். நீங்களே சென்று அத்தையவர்களை அழைத்து விட்டு வாருங்கள்'' என்றாள்.

ருக்மிணி:—ராஜேஸ்வரி! உனது தந்தையின் பிடிவாதத்தை எவ்விதத்தில் தான் மாற்றுவது? நான் சொல்வதைச் சிறிதும் செவியில் வாங்காமல் என்னைத் தூரத்துவதிலேயே நினைவாக உள்ளாரேயன்றி என் பேச்சைக் கேட்பதாகக் காணவில்லையே. நான் மட்டும் சென்று அழைத்தால் அவர்கள் வருவார்களோ? என் முகத்திற்கு நேரே சகஜமாய் வருவதாகக் கூறுவார்களேயன்றித் தமது தம்பியழைக்கவில்லை என்ற வருத்தமிராமற் போகுமா? உன் மாமி மாத்திரம் என்னை வந்தழைத்தால், உன் பிதா என்னை யனுப்புவாரா? அதையவர் உணராமல் தன் போக்காகவே போகிறாரே. நான் என்னதான் செய்வேன்? நாளை மறுநாள் அக்ஷாராப்யாசம். நாளைக்குள்ளாக நமது பந்துக்களையும் சிநேகிதர்களையும் அழைத்துவிட்டு வரவேண்டும். இன்று பொழுதேபோய் விட்டது. உன் தமக்கை வருவதற்குச் சந்தர்ப்பம் குறைவென்று எழுதிவிட்டாள். நீயோ வெளியில் செல்லக்கூடியவளன்று. நான் ஒருத்தி எத்தனை இடத்திற்குத் தான் சுற்றுவேன்? உன் தமக்கை வாராதது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அவளை நேரில் சென்று அழைத்துவரும்படியாகக் கூறினேன். அதையும் அவர் மறுத்துவிட்டார். உள்ளூராக விருந்தால் நானாகிலும் சென்று அழைத்துவருவேன். வெளியூர் செல்வதென்றால் முடிவதில்லை. ஏன்? தற்காலத்துப் பெண்பிள்ளைகளைப்போல் அயலூர் பிரயாணம் தனித்துச்செய்வதற்குச் சாமர்த்தியமில்லை. அவள் வராவிட்டாலும் ஜனங்கள் நம்மை நிந்திக்க மாட்டார்கள். அத்தை வராவிட்டால், ஏச்சுக்கிடமல்லவா? இந்த தர்ம சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்?—என்றாள்.

அப்போது ராஜேஸ்வரி தாயின் வருத்தத்திற்குத் தகுந்தாற் போல ஏதோ விஷயத்தைக் கூறி தைரியம் செய்வித்தாள். உடனே ருக்மிணி மெத்த களிப்படைந்து, "ஆகா, என் கண்ணே! உன் புத்தி நுட்பத்தையும் அற்புதமான எழிலையும் கண்டு உன்னிஷ்டப்படி உன்னை மணம் செய்வித்து மகிழச்செய்ய வேண்டிய புத்தியை உன் தந்தைக்கு ஈசன் அளிக்கவேண்டுமே யென்ற எண்ணமே எனக்கு இரவு பகலாக உதித்து வருத்துகின்றது. உம். எல்லாவற்றிற்கும் ஈசனிருக்கின்றான். சரி; நான் சென்று ஊரழைக்கச் சித்தமாகிறேன்'' என்று கூறி அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டாள். ராஜேஸ்வரிக்குத் தனது தந்தை கடைசியாகப் பேசிய

பேச்சே அவள் செவியில் கணீர் கணீர் என்று ஒலிப்பதால் அவள் அந்த எண்ணத்திலேயே ஈடுபட்டு உட்கார்ந்து விட்டாள்.

பின்னர் சில நிமிஷத்திற்கெல்லாம் ருக்மிணி ஆடையாபரண அலங்கிருதையாய்க் கண்ணபிரான் எதிரில் தோன்றி நகைத்த படியே, "சரி; எழுந்திருங்கள். நமது மற்ற உறவினர்களையும், சிநேகிதர்களையும், என் சகோதரியாரையும் அழைத்துவிட்டு வரலாம்" என்றாள்.

இதைக்கேட்ட கண்ணபிரானும் எழுந்து உடையணிந்து தயாரானார். பின்னர் வீதியில் ஆயத்தமாக நின்றிருந்த மோட்டார் காரில் இருவரும் அமர்ந்தார்கள். அப்பால் வண்டி புறப்பட்டுச் சென்று இவர்கள் குறித்த வீட்டின் எதிரில் நின்றது. உடனே இருவரும் இறங்கி உள்ளே சென்றார்கள்; அவ்வீட்டிலிருக்கும் தமது உறவினரை அழைத்துவிட்டு மீண்டும் வண்டி ஏறினார்கள்; இவ்விதமாகவே சில வீடுகளுக்குப்போய் அழைத்தார்கள். பின் ருக்மிணி வண்டியோட்டியிடம் தன் தமக்கையின் வீட்டுக்கு விடும்படியாக உத்தர விட்டாள். வண்டி சென்று ஒரு வீட்டண்டை நின்றது.

உடனே இருவரும் இறங்கினார்கள். கண்ணபிரான் வீட்டின்படி ஏறி வீதிக்கதவை யடைந்ததும் எதையோ கண்டு சீற்றங்கொண்டு பல்லைக் கடித்து "ஆ! இதென்ன ருக்மிணீ! உன் மேலெனக்கு இப்போது கடுங்கோப முண்டாகின்றது. உன் சகோதரி வீட்டிற்கு வண்டியைவிடச் செய்ததாகக்கூறி இவ்விடத்தில் ஏன் நிறுத்தச்செய்தாய்? நான் திரும்பி விடுகின்றேன்." என்று காலைப் பின்னுக்கிழுத்தார்.

இதற்குள் ருக்மிணி எதிர்மறித்து "நாதா! நான் ஒன்றும் தப்பிதமாகச் சொல்லவும், செய்யவுமில்லையே! அக்காள் வீடு என்று சொல்வதற்கு அர்த்தமில்லையா! தமது சகோதரியார் எனக்கும் தமக்கை யல்லவா? அந்தக் கருத்தைக்கொண்டே நான் சொன்னேன். இவர்களை நான் அக்காவென்று அழைப்பதைத் தாமறியமாட்டீர்களா? ஆகையால் தமக்கை இல்லமென இயம்பினேன். நாதா! அதோ அவர்கள் நம்மைப்பார்த்துவிட்டார்கள். வீட்டு வாசலேறிய பிறகு விலகிச்செல்வது அழகாகாது. உள்ளே வந்து ஒரு பேச்சு அழைத்து விட்டுச் செல்லுங்கள்" என்றாள்.

கண்ணபிரான் கோபம் ஜ்வலிக்க ருக்மிணியை நோக்கி, "ஆகா! ருக்மிணி! சாவித்ரி எமனிடத்தில் வரம் வாங்குகையில் எமன் அவளிடத்தில் ஏமாந்தது போல் என்னைச் செய்துவிட்டாயே! உன் தந்திரமே தந்திரம். உம். தொலை; உள்ளே செல்வோம். நீயழைத்துவிடு. நான் வெறுமனே நிற்கின்றேன்" என்றார்.

இருவரும் உள்ளே சென்றூர்கள். அங்கு கூடத்தில் உட்கார்ந்திருந்த தாமோதரன் இவர்களைக் கண்டதும் எழுந்து ஓடிவந்து, "ஆ! மாமா! மாமி! நமஸ்காரம். வாருங்கள்; உட்காருங்கள்" என்று கூறி இருவருக்கும் வந்தனம் செய்தான். இதற்குள் கண்ணபிரானின் தமக்கையாகிய **கோமளவல்லி** என்பவள் எழுந்து, "வாருங்கள்; உட்காருங்கள். கண்ணபிரான்! நான் ஒருத்தி உயிருடன் இருப்பதாக எண்ணம் உதித்ததா?" என்றுள்.

கண்ணபிரான் ஏதும் பதில் கூருது வாளாவிருந்தார். ருக்மிணி நாத்திக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, "என்ன அக்கா! அவ்விதம் கேட்கிறீர்கள்? இவருக்கு ஐந்து நிமிடம் ஓய்வில்லை என்பது தமக்குத் தெரியாதா? வீட்டில் நிதானித்து உண்ணவும், அலுத்து உட்காரவும் நேரமில்லாமல் வேலைத் தொந்தரவிருக்கின்றபடியால் எங்கும் செல்ல நேரமே கிடைக்காமல் போய்விடுகின்றது. நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை யன்று குழந்தை நரஸிம்மனுக்கு அக்ஷராப்பியாசம் நடக்கப் போகிறது. தாங்கள் எல்லோரும் இப்போதே என்னுடனேயே வந்து கலியாணத்தைப் பூர்த்தி செய்துவைத்துக் குழந்தையை ஆசீர்வதிக்கவேண்டும்; புறப்படுங்கள் அக்கா! தம்பீ, தாமோதரா! நீயும் இப்பொழுதே வந்துவிடு. உன் குட்டி அம்மாஞ்சியின் அக்ஷராப்யாசத்தின் வேலை முற்றும் நீதான் கவனித்துக் கொள்ளவேண்டும். உன் அம்மாஞ்சி தனது சட்டையின் வைரப் பொத்தானைக் காணும் போதெல்லாம், "அம்மா! இப்பொத்தானை என் அத்தானுக்குக் காட்டவேண்டுமே! அத்தான் எங்கேயம்மா!" என்று மெத்த தொந்தரை செய்து கத்துகிருன். சாய்மான நாற்காலியில் படுத்தால் அதிலுள்ள **கித்தானைப்** பார்த்ததும், 'என் அத்தானெங்கே? இக்கித்தானில் என் அத்தானும் நானும் உட்கார்ந்தால்மெத்தென்றுஇருக்குமே' என்று சதா சொல்லிக்கொண்டிருக்கிருன்" என்று இவள் கூறி முடிக்குமுன் கண்ணபிரானுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. அவரால் அடக்க சாத்தியமின்றி நகைத்துக்கொண்டே "என்ன ருக்மிணீ! வந்தவிடத்திலும் ஹாஸ்யமா? நீ அத்தானுக்கு மரியாதை வைக்கும் அழகு அத்தான், பொத்தான், கித்தான் என்று கூறுவது தானே! உம்; இன்னும் எத்தனை வீடு செல்லவேண்டுமென்பதை மறந்துவிட்டாயோ! புறப்படு.—கோமளம்! எல்லோரையு மழைத்துக்கொண்டு வந்துசேர்" என்று கூறிக்கொண்டே வீதியை அடைந்து வண்டியிலும் ஏறிவிட்டார். பின்னர் ருக்மிணியும் அவர்களிடம் சொல்லிக் கொண்டு வந்து வண்டியிலமர்ந்தாள். வண்டியும் செல்லத் தொடங்கியது.. கண்ணபிரான் ருக்மிணியின் சாகசத்திற்கும் தந்திரத்திற்கும் மனதிற்குள் வியந்தபடியும் மேலுக்கவளைக் கடிந்து திட்டிக்கொண்டும் சென்றூர். மிச்சமுள்ள வீடுகளிலும் சென்று

அழைத்துவிட்டு இரவு எட்டு மணி சுமாருக்கு அவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்களைக் கண்ட ராஜேஸ்வரி தாயினிடம் ஓடிவந்து, "அம்மா! என்ன செய்தி? நான் சொல்லியபடி செய்தீர்களா? பலித்ததா, வீணாய்விட்டதா?" என்று ஆவலோடு கேட்டாள். ருக்மிணி சிரித்துக் கொண்டே, "அம்மா! ராஜேஸ்வரி! உன் யோசனை வீணாகுமா! நீ சொல்லியதுபோலவே அவ்வீட்டில் இறங்கியதும் அப்பாவுக்கு வந்த கோபத்திற்களவே இல்லை. பின்னர் என்ன செய்வது? எல்லாம் சரியாய்விட்டது. தாமோதரனிடம் உன் தந்தை பேசவே இல்லை. நான் பேசி அவனையும் இன்றே வரும் படியாகவும் கூறிவிட்டு வந்தேன்" என்றாள்.

பிறகு எல்லோரும் அன்றிரவு போஜனத்தை முடித்துக் கொண்டு நித்திரையிலாழ்ந்தார்கள். மறுநாள் விடிந்தது. முதல் நாளைப்போலவே இருவரும் காலையிலேயே அழைக்கச் சென்று விட்டார்கள். பின் இடையில் வந்து போஜனத்தை முடித்துக் கொண்டு மீண்டும் போய்விட்டார்கள். வெளியூரிலிருந்து வரவேண்டிய பந்துக்களெல்லாம் அன்று காலையிலிருந்து வந்துகொண்டே இருக்கின்றார்கள். அனேக ஆட்கள் கூடிப் பங்களாவில் பெரிய பந்த விட்டுப் பலவித ஜாலர், ரஸகுண்டு, ஆங்காங்கு அனேகவித புஷ்பச் செடிகள், மகரஜோடிப்புகள் பலவிதமான நாற்காலிகள், ஸோபாக்கள், ரத்னக் கம்பளங்கள், கொத்துக் கொத்தாக மின்சார விளக்குகள் கலர்வாரியாக மின்ஸார விளக்கினால் தோரணங்கள், வளைப்புகள், வெல்கம், குட்நைட்டு (Welcome; Good Night) என்ற அழைப்பு போர்டுகளும், ஒவ்வொரு வாசற்படிக்கும் பல மாதிரியான மணிகள் கோத்த வரிசை சரங்கள் இன்னும் அனேகவித அலங்காரங்களெல்லாம் முறையே செய்து தேவேந்திரன் கொலு மண்டபம் போலாக்கினார்கள். எங்குப் பார்த்தாலும் கண்கொள்ளாக் காட்சியென்று வியப்புறும்படி சிங்காரித்திருந்தது. அதைக் கண்டு வியப்புறாத ஜனங்களில்லை. அன்று ஊரிலிருந்து வந்தவர்களை ராஜேஸ்வரி வெகு பக்ஷத்துடன் விசாரித்து வரவேற்றாள். அவளுடைய அத்தையும் தாமோதரனும் வந்து சேர்ந்தார்கள். ராஜம் தனது அத்தையைக் கண்டதும் எழுந்து ஓடி வந்தனம் செய்து அவளை அன்பாயழைத்து வந்து ஆசனமளித்து உட்காரச் செய்தாள். அத்தையுடன் தனது காதலன் வந்திருக்கிறாரா என்பதை யறிய அவளது அவா அதிகரிக்கின்றதென்றாலும் அவள் அந்த சந்தேகத்தை எவ்விதம் நிவர்த்தி செய்யக்கூடும்? அங்கு கூடியிருக்கும் மனிதர்களோ அளவற்றவர்களிருக்கின்றார்கள். அவர்கள் முன்னிலையில் புத்தியறிந்த பெண் சென்று பார்க்கவும் சாத்தியமில்லை. அத்தையைக் கேட்க

வும் வெட்கமாயிருக்கின்றது. அவன் வந்திருக்கிறான் இல்லை என்பதைத் தான் எவ்விதம் தெரிந்து கொள்வதென்று அதே யோசனையாக உட்கார்ந்தாள். தன் தாய் சீக்கிரம் வருவாளானால் அவள் விசாரிக்கக்கூடும்; அவளின்னும் வரவில்லை. அவளை எதிர்பார்த்தபடி தங்கப் பதுமைபோல உட்கார்ந்திருக்கிறாள்.

ஆகா! ராஜேஸ்வரியின் அபாரமான எழிலைக் கண்ட அங்குள்ள ஸ்திரீகளெல்லாம் தமக்குள் வியப்புறுகின்றார்கள். அவர்களில் ஒருத்தி பேசத்தொடங்கி, "ஏனம்மா பாலாம்பாள் அம்மாள்! உங்கள் மருமகளைப்போல் அழகுவாய்ந்த தருணீமணி இவ்வுலகத்திலேயே இருக்கமாட்டார்கள் என்று விவாகமான புதிதில் சொல்லிக்கொண்டார்கள். நானுமப்படியே நினைத்தேன். இப்போது நமது ருக்மிணியின் பெண்ணைப் பார்த்ததும் அவளுடைய அழகு இதற்கு ஈடாகாதெனத் தோன்றுகின்றதே! நீங்களே கவனித்துப் பாருங்கள். இவளுடைய முகத்தின் கம்பீரமான தோற்றம் அந்தப் பெண்ணினிடம் சிறிதுமில்லை. நான் சொல்லுகிறேனே என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். இவளுடைய கைவிரலின் நகத்தினழகு 'அவளுடைய முகமில்லை என்பதுதான என்னுடைய எண்ணம்.

பாலாம்பாள்:—ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்பார்கள். அதுபோல எனது வீட்டில் உள்ள குருபிகளுக்கு அவள் ரம்பையைப்போல் தான் நாங்கள் எண்ணுகிறோம். ருக்மிணியம்மாளின் வயிற்றுப் பாக்கியமும் கோமளவல்லியம்மாளின் அதிர்ஷ்டமும் ஒன்றுகூடி இத்தகைய சிரோரத்தினங்களைப் பிறப்பித்தான் ஈசன். எல்லாவற்றிற்கும் புண்ணியம்செய்யவேண்டாமா!

கோமளவல்லி:—நீங்கள் சொல்வது வெகு அழகாக இருக்கின்றதே! பேரில்லா ஊருக்குப் பட்டாமணியமாம். அதுபோல சற்றும் தகுதியில்லாத எனக்கு நாட்டுப் பெண்ணுக்குவதை அவள் தந்தை கேட்டால் உங்கள்மீதும் துவேஷங் கொள்வார். நடவாத காரியத்தை ஏன் சொல்லுகிறீர்கள்? என் ராஜத்தை மருகியாகவும் பாரியையாகவும் அடைய எந்தப் புண்ணியாத்துமாக்கள் கொடுத்துவைத்திருக்கிறார்களோ....ஒருகால் அந்தப் பாக்கியம் வேதவல்லியம்மாளுக்குக் கிடைக்கலாமென்று எண்ணுகிறேன்.

வேதவல்லி:—பேஷ்! பேஷ்! பரிகாஸம் செய்கிறீர்களா! கையிலுள்ள நெய்யைவிட்டுக் கடையிலுள்ள வெண்ணெயைத் தேடுவார்களா? தாங்கள் கூறுவது சற்றும் பொருந்தாது. உங்களுடைய ராஜம் உங்களுக்குத் தான் கிடைப்பாள். இவளுடைய தமக்கையான மரகதத்தை உங்களுடைய புதல்வனுக்குக் கொடுப்பார்கள்; நான் ராஜத்தைக் கேட்கலாமென எண்ணினேன்.

அவளை வேறு இடத்தில் கொடுத்துவிட்டபடியால் நான் அந்த ஆசையைக் கட்டோடு விட்டுவிட்டேன். உங்கள் புதல்வனுக்குக் கொடுக்க என் மறுக்கவேண்டும் ?

கோமளவல்லி:—அந்த விவரம் எனக்குத் தெரியுமா? அவர்களுக்குச் சரியான பதவியில் நானிருந்தால் கொடுக்கலாம். எனது நிலைமையில் என் சம்பந்தம் செய்துகொண்டால் அகௌரவம் அவர்களுக்கு வராதா! பெரிய ஜாகிர்தார் பெண்ணைக் கேவலமான உத்தியோகஸ்தன் பிள்ளைக்குக் கொடுத்தானும் என்று பிறர் பரிகஸிக்க மாட்டார்களா? அவளை நாட்டுப் பெண்ணாக அடையும் பாக்கியம் எனக்கில்லை என்பதை அறியமாட்டேனா! அதனாலேயே நான் அவ்விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கின்ற வழக்கமே இல்லை.

ரங்கநாயகி:—நன்றாயிருக்கின்றது. தங்களுடைய புதல்வனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் அகௌரவம் என்கிறீர்களே! தங்களைத் தனது சோதரி என்பதற்கு அந்த அகௌரவம் எங்கே போயிற்று? தனது சொந்த மனிதர்களுக்குள் சம்பந்தம் செய்ய அகௌரவமென்ன? நீங்கள் ஜாகிர்தார் வீட்டுப் பெண்ணல்லவா? அந்த கௌரவம் எங்கே மறைந்துவிட்டது? உங்களுடைய கால விதியினால் தற்போது செல்வம் மறைந்திருக்கின்றதேயன்றி ஆதியில் இருந்தவற்றை மறக்கமுடியுமா? கண்ணபிரான் இவ்விதம் சொல்வது அழகல்ல. ருக்மிணி அவ்வாறு சொல்கிறாளா?—என்று இவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் மணி எட்டடித்தது. குண்டும்போட்டது. அழைக்கச் சென்றிருந்த ருக்மிணியும் கண்ணபிரானும் வந்துவிட்டார்கள். ருக்மிணி வந்தவர்களையெல்லாம் வெகு அன்பாய் விசாரித்து பெரியவர்களுக்கெல்லாம் வந்தனம் செய்து எழுந்தாள். தனது நாத்தியும் தவறாமல் வந்ததற்கு மெத்த மகிழ்ச்சியடைந்து, அவள் பக்கலில் உட்கார்ந்து வெகுவாய் விசாரித்து, "அக்காள்! அத்திம்பேர் வந்தாரா? குழந்தை தாமோதரன் எங்கே? வந்தானா?" என்று விசாரித்தாள்.

கோமளவல்லி:—அம்மா! அவர் ஊரிலில்லை. தாமோதரனும் நானும்தான் வந்தோம். அவன் வருவதற்கு இணங்கவே இல்லை. நான் பலவந்தித்து அழைத்து வந்தேன். ஹாலில் உட்கார்ந்திருக்கிறான்.—என்று இவள் கூறும்போதே ராஜம் தன் சந்தேகம் நீங்கப் பெற்றவளாய்த் தன் நாயகன் ஹாலில் உட்கார்ந்திருப்பதைத் தான் நேரில் காண்பதுபோல் எண்ணி உள்ளம் பூரித்து மகிழ்ந்தவளாய் வீற்றிருக்கிறாள்.

ருக்மிணி:—எப்போது ஊருக்குச்சென்றார்? அடடா! அவரில்லையா?—என்று விசாரித்து ராஜத்தைப் பார்த்து "இவர்களையெல்லாம் விசாரித்துப் பலகாரம் செய்வித்தாயா?" என்றாள்.

ராஜம் நாணிக்கோணி சிரித்தபடியே எல்லாம் செய்ததாகத் தலையை அசைத்தாள். அவளுடைய உருவம் மட்டும் இவ்விடமிருக்கின்றதே யன்றி அவளது மனது ஹாலில் வீற்றிருக்கும் தாமோதரன்மீதே சென்றுவிட்டது. 'நான் எந்தவிதமாக அவரைக் காணக்கூடும்' என்று மனம் ஏங்குகின்றது. இதற்குள் ருக்மிணி ஏதோ அலுவலின்மேல் எழுந்துபோய் விட்டாள்.

அங்கு கூடியிருக்கும் பெண்கள் கூட்டத்தில் வயது முதிர்ந்த ஒருமாது தன்குரல் நடுங்கப் பேசத்தொடங்கி "ஏனம்மா! கோமளவல்லியம்மாள்! நீங்கள் பேசிக்கொண்டவைகளையெல்லாம் கவனித்தே வந்தேன்". எல்லாக்காரியங்களுக்கும் அததன்படி நடத்தி வைக்க ஈசன் இருக்கிறார். உங்கள் வார்த்தையால் பயன் யாது?' என்று எங்க கொள்ளுப் பாட்டியாகிய கிட்டி அடிக்கடி நான் சிறியவளாயிருக்கையில் சொல்வாள். அது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஏதனால் அப்படிச் சொல்வாளென்றால் நான் பாலியத்தில் என்னுடைய அம்மாஞ்சியை உறவுகேட்டதில் அவர் சொன்னார். இந்த உறவு—அதாவது, என்னுடைய எள்ளுத் தாத்தாவின் மகன் சொள்ளுத் தாத்தாவின் மகன் வெறும் தாத்தாவின் தங்கையின் தம்பியின் ஆமுடையாளுக்கு மூத்த பேரப்பிள்ளையின் மைத்துனனுக்கு மாமா தாத்தாவின் இளையாளின் அண்ணன் மாப்பிள்ளையின் பாட்டிக்குக் கடைசிப் பேரனின் மாமியாருடைய நாட்டுப்பெண்ணின் நாத்தனாருடைய பெரியம்மாவின் அம்மாவுக்கு ஓர்ப்படியின் மூன்றுவீட்டுப் பிள்ளையினுடைய கொள்ளுப்பேரன் எங்க வீட்டுக்கு வந்திருந்தார். அவர் மிக்க அழகாயிருப்பார். அவரையே விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று எனக்கு மனதில் தோன்றிவிட்டது. என் பிதா அவருக்குக் கொடுக்கமாட்டேன்னு பிடிவாதம் பண்ணினார். நான் அவரைத் தான் மணப்பேன்னு முரட்டுத்தனம் செய்தேன். அப்பதான் எங்க கொள்ளு பாட்டியப்படி சொல்வாள். அவள் சொல்லியதுபோல நான் ஆசைப்பட்டவனையும் மணக்கவில்லை. தந்தை கொடுக்க எண்ணியவிடத்திலும் மணமாகவில்லை. என்பாட்டியின் பேரப்பிள்ளையும் என் தாத்தாவுக்குப் பிள்ளையும் என் தாயாருக்குத் தம்பியும் என் தந்தைக்குமைத்துனரும் எனக்கு மாமாவும் என்பெரிய மாமிக்கு மைத்துனருமான மனிதரையே நான் மணந்தேன். அதேபோல ராஜம் எங்கே வாழ்க்கைப்பட கொடுத்து வைச்சிருக்காளோ அங்கே தான் வாழ்க்கைப்படுவாள்." என்றாள். இந்த உறவின் முறையையும் கிழவியின் வார்த்தையையும் கேட்டு எல்லோரும் விலாப்புடைக்க நகைத்தார்கள். இவர்கள் நகைக்கக் கண்ட கிழவிக்குக்கோபம் வந்துவிட்டது. அவள் கோபத்துடன் பேசத்தொடங்கி, "ஏண்டியம்மா! கிழட்டுப் பிணமான என் வார்த்தை உங்களுக்குச் சிரிப்பாயிருக்கின்றதோ! என்

அம்மாஞ்சி சொல்லிய உறவை நான் சொன்னேன். இந்தக் காலத்தில் உறவு சொல்கிறார்களே! பாதுரு, மதுரு; புருதுரு, அங்குல்லா கிராணிபாதரு, எங்கள் வசிஸ்ட்டர், புராண்டு இன்னு இப்படி எல்லாம் நான் சொல்லவில்லேன்னு பரிகாஸமாய் சிரிக்கின்றீர்களா! எங்க காலத்தில் இவ்வளவு உறவும் உறவாடுவது வழக்கமுண்டு. நான் அப்பொழுதே ருக்குமிணியிடம் சொன்னேன். நான் வரலேடி அங்கே என்னைப் பரிகாசம் பண்ணுவான்னு. அவகேக்கல்லே. வந்துதான் ஆகணுமுண்ணு சொன்னாள். அவ்வளவுதான் சொல்லி ஆசையாய் அழைக்கிறவா யாருண்ணு நான் வந்தேன்.என்னைக் கண்ட உங்களுக்கு இளக்காரமாய் விட்டது" என்று கிழவி முணுமுணுத்துக்கொண் டிருந்தாள்.

அப்படி யிருக்கையில், ருக்மிணி எல்லோரையும் போஜனத்திற் கழைத்தாள். எல்லோரும் எழுந்து சென்றார்கள். அன்று இரவே அனேக பெரிய மனிதர்களும் உறவினர்களும் வந்து கூடி விட்டார்கள். அன்று இரவு முழுவதும் பங்களாவில் பெரிய ஆரவாரமாகவே காணப்பட்டது. பொழுது விடிவதற்குள் பெயர் பெற்ற மேளக்காரர்களும், பாண்டு வாத்யக்காரர்களும் வந்து போட்டா போட்டி யுத்தம் செய்வதுபோல் தமது திறமை முற்றும் காட்டி வாசிக்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த மேளவாத்யத்தின் ஸாரம் தெரிந்து கேட்கும் ஜனங்கள் சிலர்; இவர்களின் போட்டியைக் கண்டு வியப்புற்று வேடிக்கை பார்க்கும் மனிதர் சிலர்; இவ்விதமாக மேளக்காரரிடம் கூட்டம் கூடிவிட்டது. மோட்டார்காரும் கோச்சும்,பீட்டனும், ஜட்காவும், மாட்டு வண்டி, ரிக்ஷா, ஸைகில் முதலிய வண்டிகளில் கட்டுக்கட்டாய் மனிதர்கள் வந்து கூடிவிட்டார்கள். அந்த வீதி முற்றும் ஒரே வண்டிகளால் தோரணம் கட்டியிருப்பதுபோல வரிசையாக இருசாரிகளிலும் நிற்பதைக்கண்டால் ஜாகீர்தார் வீட்டுக் கலியாணத்திற்கு வண்டிகளின் தோரணங்களும் கட்டியிருக்கின்றதென்று எண்ணும்படி யிருந்தது. பங்களாவின் உள்ளேயோ அளவற்ற சீமாட்டிகள் அனேக வித ஆடையாபரணதிகளால் அலங்கரித்துக் கொண்டு ஜில்ஜில் என்று நின்று காட்சி கொடுக்கின்றார்கள். சாதாரணமான ஸ்திதியுடைய பெண் பிள்ளைகளும் தமக்கு சக்தியான வரையில் அலங்கரித்துக்கொண்டு மற்றைய சீமாட்டிகளைப்பார்த்து அவர்களது அழகையும் நகைகளையுமே பார்த்தவண்ணம் நிற்கின்றார்கள். ருக்மிணியம்மாளுக்குத் தனது மூத்த பெண்ணான மரகதம் வரவில்லை என்ற வருத்தமொருபுற மிருப்பினும் ,தனது நாத்தனார் வந்துவிட்ட பெருமையால் அதைச்சற்று மறந்தவளாய் வந்தவர்களை உபசரித்து மகிழ்விப்பதையே தன் கடமையாகக் கொண்டாள்.

ராஜேச்வரியும் தனது உயர்தர ஆபரணாதிகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டு காசி பட்டுச்சேலேஉடுத்துக்கொண்டு நமது ஜாதியாசாரப்படி ஆண் பிள்ளைகளின் மத்தியில் வராமல் தனியான ஒரு விடுதியில் தனக்கு ஜோடியான பெண்மணிகளுடன் உல்லாச மாக அமர்ந்திருக்கிறாள். எனினும் அவள் மனத்தில் 'அத்தானை எந்தநேரம் காணலாம்' என்ற எண்ணமே குடிகொண் டிருக்கின் றது. அவள் அந்த எண்ணத்தை வெளிப்படுத்திக் கொள்ளாமல் சாதுர்யமாய்ப் பேசிக்கொண்டே இருக்கிறாள்.

இவர்களுக்குத் தூரத்து பந்துக்களாகிய சிலர் இவர்களனுப் பிய மணஓலேயைக் கண்டதும் பெரிய ஜாகீர்தாரின் வீட்டுக்கலியா ணத்திற்குச் சென்றால் தமக்கு ஏராளமான சன்மானம் கிடைக்கு மென்றுஎண்ணி தமதுகுடும்பத்துடன் வந்துகூடிவிட்டார்கள். நாட் டுப்புறத்து வாசிகளாகிய அவர்கள் இங்குள்ள கண்கொள்ளாக் காட் சியையும் வைபவத்தையும் இதன்முன் கண்ணாலும் காதாலும் கண் டும்கேட்டுமறியாததால்அவர்கள்வியப்பிற்குஅளவே இல்லை.சீமைக் கமலம் என்னும் வஸ்துவை இவர்கள் கேள்விப்பட்டிருப்பதும் அரிது. அத்தகைய பொருளை இங்கு நகசிகை பரியந்தம் ஒவ்வொரு சீமாட்டிக ளிடத்திலும் காணவே இவர்கள் இமை கொட்டாமல் உற்று உற்றுக் கவனித்தபடியே இருக்கிறார்கள். சில சீமாட்டிக ளின் பெண்களுக்குக் காதில் தோடு, மாட்டல், கீழே லோலாக்கு மேலே ஒரு தினுசு லோலாக்கு, லவங்கப்பூ, கொப்பு முதலிய சகலமும் காதே தெரியாமல் வைரத்தினாலேயே அணிவித்திருக் கின்றார்கள். இதைக் கண்ட நாட்டுப்புறத்து வாசியாகிய ஒரு மாது, அந்தச் சீமாட்டியை விளித்து, "எம்மா! இந்தக் குழந்தை பிறக்கும்போதே காதில்லாமல் பிறந்ததா? அதற்காக இந்த மாதிரியான புது காது வாங்கி மாட்டியிருக்கிறீர்களா? அது எப் படி ஒட்டியிருக்கிறது? வலிக்காதா! ஐயோ பாவம்! கண்ணாடி பளபளவென்று காதில் பொத்தியிருக்கின்றதே! புரை வெச்சுப் பூட்டுதானால் என்ன செய்வது?" என்று கேட்டாள்.

இதைக் கேட்ட எல்லோரும் நகைத்தனர். "ஐயோ பாவம்! இவர்களிவ்வித ஆபரணங்களையே பார்த்ததில்லையாகையினால் கேட் கிறார்கள்" என்று யூகித்தவர்களாய் அவளை நோக்கி, 'இவைகளெல் லாம் தனித்தனியான ஆபரணங்கள்' என்று கூறினார்கள். இது கேட்டு வியந்தாள் நாட்டுப்புறவாசி. இவர்களில் மற்றொருத்தி வேறு சீமாட்டிகளை நோக்கி, "எனம்மா! நீங்களெல்லாம் சாப் பிடுகிற வழக்கம் கிடையாதா? வயிற்று வலியா உங்களுக்கு? நானும் நேற்று வந்ததுமுதல் பார்க்கிறேன். இடுப்பில் எதையோ போட்டு இறுக்கிக் கட்டி வைத்திருக்கின்றீர்களே; வைத்தியரிடம் மருந்து வாங்கிக்கொள்கிறது தானே; இந்தப் பட்டையை அவிழ்த்தால் வலி அதிகமாய் விடுமா?" என்று கேட்டாள். இது கேட்ட அங்

குள்ளோர் விடாநகை புரிந்தார்கள். "இது பட்டையல்ல. இது ஒட்டியாணமென்னும் ஓர் ஆபரணம்" என்று கூறினார்கள். இன்னும் சில சீமாட்டிகள் தற்கால நாகரிக முறைப்படி கையில் (ரிஸ்ட்டு வாட்ச்) கைக்கடியாரம் தங்கச் சங்கிலியில் அணிந்திருப்பதைச் சில நாட்டுப்புறவாசிகள் உற்று உற்றுக் கவனித்துவிட்டு, "ஏனம்மா! இதேன்ன பெரிய ஆச்சரியமாய் இருக்குதே! கையிலே மாருலே தாது என்றும் ஹிருதயமென்றும் அடித்துக்கொள்வது எமக்கெல்லாங் கூடவிருக்கின்றது. இந்த வளையல் அப்போதிலிருந்து டக் டக் என்று அடித்துக்கொள்கிறதே இதென்ன விசித்திரம்! கையில் இத்தனை வளையலைப் போட்டுக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தால் கையிலுள்ள தாதுவை வைத்தியனின் உதவியால் இந்தக்கண்ணாடிப் பெட்டியில் போட்டுக் கையிலேயே கட்டிக்கொண்டிருக்கிறீர்களா? அப்படித்தானிருக்கும். இல்லாவிட்டால் கேவலம் வளையலுக்கு உசிரு ஏது?" என்றார்கள். இது கேட்ட ஏனையோரும் அடங்காச் சிரிப்பாய் ஐந்து நிமிஷம் உடல் குலுங்கக் குலுங்க நகைத்தார்கள். "ஐயோ! இவ்விதமான யோசனையும் தோன்றுகின்றதே!" என்று வியப்புற்றார்கள்.

அத்தருணம் குழந்தைக்கு நலங்கிட்டு எண்ணெய் தேய்க்க மணையில் உட்காரவைத்துவிட்டு ருக்மிணி இவர்களையெல்லாம் அழைத்தாள். உடனே எல்லோரும் எழுந்து முன்பக்கத்துக் கலியாண மண்டபத்தை யடைந்தார்கள். அனேக பெண்கள் விதவிதமான நலங்குகள் பாடினார்கள். குழந்தை நரஸிம்மனுக்கு மஞ்சள் நலங்கிட்டு எண்ணெய் தேய்த்தார்கள். பின்னர் ஆரத்தி எடுத்து மணையிலிருந்து குழந்தையை எழுப்பிவிட்டார்கள். மங்களஸ்நானம் செய்வித்து அநேக ஆபரணாதிகளால் குழந்தையை அலங்கரித்து அக்ஷராப்யாஸத்திற்குப் பந்தலில் உட்காரவைத்தார்கள். அனேக சீமான்கள் கூட்டங் கூட்டமாகக் கூடிவிட்டார்கள். பூரிப்பிராமணர்கள் ஆயிரக்கணக்கில் வந்து நிறைந்துவிட்டார்கள். மேளவாத்தியங்கள் ஆகாயம் வரையில் தொனிக்கின்றன. மணவறைக்குப் பக்கலில் ஸ்திரீகள் தங்களுக்கென அமைக்கப்பட்ட இடத்தில் ஓரே ஜோதிமயமாக கந்தர்வ மாதர்களைப்போல் கூடியிருக்கின்றார்கள். ருக்மிணியும் கண்ணபிரானும் மணையில் உட்கார்ந்து குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு புரோகிதர் சொல்லியபடியே சகலவிதமும் செய்து அக்ஷராப்யாசத்தை வெகு சிறப்பாய்க் குறித்த முகூர்த்தத்தில் நடத்தினார்கள். அநேக பெரிய மனிதர்களெல்லாம் சவரன்களும், நோட்டுக்களும், சரிகைப்பட்டுப்பீதாம்பரங்களும், நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும் பலவிதமாகக்குழந்தைக்கு ஓதியிட்டனர். பிறகு ஏழைப் பிராம்மணர்களுக்கும் இன்னுமற்ற பரதேசிகளுக்கும் வேஷ்டிகள், ரூபாய், தேங்காய், பழம், வெற்

றிலே பாக்கு, சர்க்கரை முதலியன அபரிமிதமாக வழங்கப்பட்டன. சபையிலுள்ளோருக்கும் தாம்பூலம் வழங்கினர். பின் மாதர்கள் மங்கள ஆராத்தி எடுக்க, குழந்தை மணையைவிட்டு எழுந்தான். பிறகு அங்குக் கூடிய யாவரோருக்கும்-பரதேசிகள் முதல் சீமான் வரையில் சகலமானவர்களுக்கும்—அவரவர்களுடைய அந்தஸ்த்திற்குத் தகுந்தபடி போஜனம் அளிக்கப்பட்டது. பின் எல்லோரும் தாம்பூலந் தரித்துக்கொண்டு சிரமபரிகாரம் செய்துகொண்டனர்.

நமது மடந்தை ராஜேஸ்வரிக்கோ அவள் மனமுழுதும் அவனுடைய அத்தானிடமே சென்று பதிந்து கிடக்கின்றது. அவள் புஷ்பவதியாகிய மடந்தையானபடியால் பகிரங்கமாக எழுந்து வெளியில் செல்லவும் பேசவும் மாட்டாமல் தவிக்கின்றாள். ஜன்னல்களின் வழியாய்ப் பார்த்தால் எங்கேனும் செல்லும்போது அவனைக் காண நேருமோ என்ற அவாவினால் அவ்விதம் பார்த்தாள். அதுவும் பயனற்றுவிட்டது. இவள் இச்செய்தியை வெளியில் சொல்வதற்குமில்லை. புத்தியறிந்த பெண்ணானதலால் தன்னை மணக்க முறையுள்ளவருக்கு எதிரிலும் வருவதற்கில்லை. அது ஜாதிவிரோதம். அவனைக் காணும்படியான ஸந்தர்ப்பம் இவளுக்கு எவ்விதம் வாய்க்கும்? அவன் எந்தவிடத்திலிருக்கிறான் என்பதுவும் இவளுக்குத் தெரியவராது. இன்று ஒரு தினத்தில் தான் அவள் அவரைக் காணலாம்; நாளை அவர் தம் வீடு சென்றுவிட்டால் பிறகு பார்ப்பதற்கே நேரமேற்படுவது குதிரைக்கொம்பாய்விடும். ஆதலால் அவள் "நாம் யாருடைய உதவியைக்கொண்டு அவரைக் காணும் வழி தேடுவது? இப்போது சிரம பரிகாரமாய் எல்லோரும் அயர்ந்திருக்கிறார்கள். இச்சமயம் அவரும் எவ்விடத்தில் படுத்திருக்கிறாரோ, தெரியவில்லை!" என்றெண்ணியவண்ணம் உட்கார்ந்திருக்கிறாள். மெல்ல எழுந்து அந்த ஹாலைச் சுற்றிவருகிறாள்; ஜன்னல்களின் வழியாகப் பார்க்கிறாள்; எங்கும் அத்தானைக் காணவில்லை.

இதற்குள் மணி மூன்று அடித்துவிட்டது. நித்திரையிலிருந்து எல்லோரும் எழுந்தார்கள். இடைவேளை யுண்டி பலவிதத்தில் தயாராகவிருந்தவற்றை ஆண் பெண் ஆகிய எல்லோரும் செய்துகொண்டு தலைசீவுகிறவர்களும், ஜடைபோடுபவர்களும், பிச்சோடா போடுபவரும், முகம் சுத்திசெய்து பொட்டிட்டுக் கொள்வோரும், புதிய சேலை கட்டிக்கொள்வோரும் தம் தம் இஷ்டப்படி அலங்காரம் செய்துகொண்டார்கள். மணி ஐந்து அடித்துவிட்டது. வெகு உன்னதமாக அலங்கரித்துள்ள மண்டபத்தில் கணக்கற்ற ஜனங்கள் கூடிவிட்டார்கள். மகரம் கட்டியுள்ள விடத்தில் குழந்தையை உட்காரவைத்தார்கள்: சங்கீதக் கச்சேரியில் பிரக்யாதிபெற்ற மோகநாங்கி என்னும் மாது தனது ஜதையுடன்

வந்து சேர்ந்து பாடத் தொடங்கினாள். முதலில் பைரவி வர்ணம் பாடி முடித்துப் பின்னர், ஹம்ஸத்வனி ராகத்தை ஆலாபனம் செய்து வாதாபி கணபதிம் பஜே என்ற கீர்த்தனம் பாடி, தோடி ராகத்தை ஆலாபனம் செய்யத் தொடங்கினாள். குயிலினுமினிய குரலினால் இவள் பாடுவதும் இவள் பாடுவதற்கிசைந்து பிடில் வாசிப்பதும், அதற்கேற்றபடி மிருதங்கம் வாசிப்பதும் சேர்ந்து கர்ணமிருதமாயிருந்தது. அந்தக் கச்சேரியைக் கேட்டு ஆநந்த மயமாகத் தலையாட்டித் தாளம்போட்டுப் பரவசமாக வீற்றிருக்கும் ஜனங்கள் இடையிடையே கரகோஷம் செய்து களித்தனர்.

பெண்கள் கூட்டத்திலும் ஸங்கீதத்தினிடத்துப் பிரேமையுள்ளவர்கள் ஆநந்தமாகக் கேட்டு மகிழ்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் கூடவிருக்கும் நாட்டுப்புறவாஸிகளாகிய பெண்பிள்ளைகள் பாட்டுக்கச்சேரி பாடுகிறவளை இமைகொட்டாமற் பார்த்தபடியே பரிகாசமாக நகைத்து, "ஐயோ! இதென்ன பரிபவம்! தராணும் தராணும் தந்தோம் நாணு நீயா என்று என்னமோ உளறுகிறாளே! இந்தச் சபையில் இவளுக்கு என்ன கொடுப்பார்கள்? தராணும் என்கிறாளே! என்ன தராணும்? கடகடவென்று என்னமோ குடுகுடுப்பைக்காரன் உடுக்கையைப்போல் நெஞ்சில் ஏதோ உளறுகின்றதே! இதென்ன விசித்திரமடி! ஏனம்மா! இவள் பண்ணுகிறாள் இது என்னது? என்னமோ தலையை ஆட்டுகிறாள், எதையோ விரலால் அப்படி இப்பிடி இன்றா. இந்த மாதிரியான வேடிக்கையை நாங்க பார்த்ததே இல்லையே. அவன் இங்கு ஏன் தமுக்குத் தட்டுகிறான்? தச்சன் வாள் வேலை செய்வதுபோல இவன் ஏதோ ரம் ரம் என்று அறுக்கிறானே. இது என்ன வேடிக்கை! சுக்குஸ்(சர்கஸ்) இன்றாளே அதுதான் இதுவா! அதுக்கு மூணு பேர் கூச்சபோட்டாப்பலே பண்ணுறாளே! அதைக் கண்டு ஏன் இவர்கள் தலையாட்டுகிறார்கள். இன்னும் சிலர் ஆகா! ச்சுச்சுச்சு என்று பரிதாபப்படுகிறார்களே! இதில் அழுவதுபோல அர்த்தம் வச்சி பண்றாளா!" என்று கேட்டார்கள்.

இதைக்கேட்ட எல்லோரும் கொல்லென்று நகைத்துத்தம்மைத் தாமே அடக்கிக்கொண்டு, 'இது சர்கஸ் அல்ல; வேடிக்கையுமல்ல: குழந்தையை மணையில் வைத்துப்பாடுவதற்காகப் பாட்டுக் கச்சேரி இது. நீங்கள் எப்போதும் கேட்டிராமையினால் உங்களுக்கு இது புதிதாகத் தோன்றுகின்றது" என்றார்கள். இதுகேட்ட அந்த நாட்டுப்புறத்து மனிதர்கள் நகைத்து 'ஐயோ! இதென்ன பாட்டுக் கச்சேரியம்மா! எங்கள் ஊரிலும் எந்தக்கலியாணத்திற்கும் மணையில் வைத்துப் பாடுவதுண்டு. வீட்டுப் பெண்பிள்ளைகளோ ஊர்ப் பெண்களோ கூடி,

(கும்மி மெட்டு.)

எசோதை வயிற்றில் பிறந்தாண்டி! அவன்
பசங்களோடே திரிஞ்சாண்டீ!
சூர்பணகி மூக்கை அறுத்தாண்டீ! அவன்
சேலையை வாரி ஒளித்தாண்டீ!
கோவர்த்தனத்தை எடுத்தாண்டீ! அதை
ராவணன் தலையில் போட்டாண்டீ!
காளிங்கமடுவில் குதிச்சாண்டீ! அவன்
காக்காயின் கண்ணைக் குத்தினுண்டி!
சங்கரன் வில்லை ஒடித்தாண்டி! அவன்
ஜானகியை மணம் செய்தாண்டீ!
பூதகி பாலைக் குடிச்சாண்டீ! பஞ்ச
பாண்டவர்க்குத் தூது போனுண்டி.

என்று வரிசையாகப் பாட ஆரம்பித்து விட்டதைக்கேட்ட பெண் பிள்ளைகளுக்குச்சிரிப்பு அடக்கமுடியாமல் வந்துவிட்டது. எல்லோரும் பெருத்த சத்தமிட்டுக் கடகடவென்று சிரிக்கின்றார்கள். சிரிப்பு ஓயாமல் வருவதால் அவர்கள் பாடுவதை நிறுத்தச் சொல்வதற்கும் இவர்களால் சாத்யப்படாமல் போய்விட்டது. அவர்கள் விடாது உரத்த குரலில் நிறுத்தாமல் பாடுவது ஆண்பிள்ளைகளின் காதிலும் கேட்டுவிட்டது. அவர்கள் திடுக்கிட்டுப்போய் "இதென்ன இந்த விவாக கோலாகல வேளையில் யார் பெரிய குரலில்புலம்புகிறார்கள்" என்று ஒரே இரைச்சலாக "என்ன, என்ன!" என்று கேட்டவண்ணம் பலர் எழுந்து பெண்கள் கூட்டத்தின் மத்தியிலும் வந்து விட்டார்கள். இந்த அமர்க்களத்தில் பாடகர்களும் தமது வேலையை நிறுத்திவிட்டு இவ்விடத்தைக் கவனிக்கலானார்கள். பல ஆண்பிள்ளைகள் திரளாகப் பெண்பிள்ளைகளிருக்கு மிடத்திற்கு வந்துவிடவே எல்லோரும் நகைத்தபடியே வயிற்றைப் பிடித்துக்கொண்டு எழுந்து நின்றார்கள். இங்கு ஆடவர்கள் வந்ததையும் பெண்கள் எழுந்ததையும்கண்ட பிறகே இந்தப் பெண்பிள்ளைகள் தாம் பாடுவதைச்சற்று நிறுத்தித் தாமும் எழுந்து நின்று, "ஏன் எழுந்து விட்டீர்கள்? வேடிக்கை ஆய்விட்டதா? எங்க ஊர்லே இந்தப் பாட்டெல்லாந் தான் பாடுவார்கள்" என்றார்கள். இதற்குள் ஆண்பிள்ளையின் மத்தியில் இருந்த ஒரு பரிகாசக் குறும்புக்காரன் 'இவர்கள் அழவில்லை; பாடினார்கள்' என்பதை உணர்ந்து அவர்களை நோக்கி, "அம்மா! உங்களுடைய பாட்டின் பிரதாபம் தெரியாமையினால் வேறு ஆளை நியமித்து விட்டோம். நீங்கள் எல்லோரும் கட்டுப்பாடாகக் கோயிலில் சென்று அங்கு உட்கார்ந்து,

தோசை வடை பொங்கல் தந்தாண்டீ!
அதை ஆசையுடனே தின்னேண்டி!
தயிரு வடையும் தந்தாண்டீ! அதை
வயிறு வெடிக்கத் தின்னேண்டீ!

என்று பாடுங்கள். கும்பல் கூடி விடுவார்கள்" என்றான்.

இதுகேட்ட ஆண் பெண்ணாகிய எல்லோரும் கொல்லென நகைத்துவிட்டார்கள். பிறகு சந்தடி செய்யாதிருக்கும்படியாகக் கூறிவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

பிறகு வெகுநேரம் பெண்பிள்ளைகளுக்குச் சிரிப்பு அடங்கவே இல்லை. அவர்கள் நகைத்தபடியே உட்கார்ந்திருக்கிறார்கள். சந்தடி அடங்கிய பின்னர் மீண்டும்மோகனாங்கி பாடத்தொடங்கிமத்தியில் விட்ட தோடி ராகத்தை முன்னிலுமதிகமான திறமையுடன் பாடி "எந்துகு தயராதுரா" என்னும் கீர்த்தனத்தை வெகு நேர்த்தியாகப் பாடி ஸ்வரம் போட்டு முடித்தாள். அப்போது கண்ணபிரான் காபிராகம் ஆலாபனம் செய்து "நித்யரூபா! எவரிபாண்டித்யமேமி நடுசுரா" என்னும் கீர்த்தனத்தைப் பாடும்படியாகக் கூறினார். உடனே அவள் ஆரம்பித்தாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்தநாட்டுப்புறவாசிகள் "அட ஆச்சரியமே! பட்டணவாசத்திலே காப்பிதான் குடிபோலப் பழகிவிட்டது. அந்தக்காப்பிக்குப்பாட்டும் காப்பி ராகமுமா கட்டிவிட்டார்கள்? நன்னாயிருக்குது. இவர்கள் சொல்லும்படிக் கூறுவதையெல்லாம் அவளும் சொல்றாளே!" என்றார்கள்.

இதுகேட்டமற்றவர்கள் நிறைந்த குடம் தளும்புமா! அதுபோல இவர்களுக்குக் கிராக்கி கிடையாது, சொல்வதைப்பாடுவார்கள் என்றார்கள். மோகனா அந்தப்பாட்டைப் பாடி நிறுத்தியதும் இந்த நாட்டுப்புறத்து வாசிகள் மோகனாவைப் பார்த்து, "அடீ! பாட்டுக்காரி! குழந்தையை மணையில் வைத்து முதலில் கௌரிகல்யாணம், லக்ஷ்மி கல்யாணப், நலங்கு இதுதான் பாடணும். நீ என்னமோ பாட்றே! அந்தப் பாட்டுக்களைப் பாடிவிட்டு லாலி, ஓடம், எச்சரிகே, கும்மி இதெல்லாம் பாட்ரியம்மா! நீ கிராக்கிஇல்லாத பொண்ணாயிருக்கே. அதொட்டு சொன்னேன்" என்றார்கள். இதைக் கேட்டவர்கள் மீண்டும் நகைப்பதுடன் மோகனாங்கியும் விலாப்புடைக்க நகைத்தபடியே "பாட்டீ! நீங்கள் மணையில் உட்காருங்கள். இந்தப்பாட்டுக்களையெல்லாம் பாடுகிறேன்" என்றாள். கண்ணபிரான் ருக்மிணி இருவரும் 'அட சனியன்களே! ஏழைகளாக இருக்கின்றார்களே, மேலும் பட்டணத்தைப் பார்க்க வேண்டுமென்று தொந்தரைசெய்தார்களேயென்று இவர்களைவரவழைத்தது பெருத்தஅவமானமாக இருக்கின்றதே! ஏதேனும் சொன்னால் பணக்கொழுப்பு என்பார்கள். இந்தக்கஷ்ட காலத்திற்கு என்னசெய்வது?" என்றுமனதிற்குள்ளேஎண்ணிவருந்துகிறார்கள். ருக்மிணி இவர்களைவெகு சாமர்த்தியமாய் "பலகாரம் சாப்பிடவாருங்கள்" என்று அழைத்துக் கொண்டுவந்து பின்கட்டை அடைந்தாள். மறைவிலிருந்தபடியே இந்தவேடிக்கைகளையெல்லாம்பார்த்துக்கொண்டிருந்த ராஜேச்வரி நகைத்தபடியே அவர்களை நோக்கி "ஏனம்மா! நீங்கள் பட்டணம்

சுற்றிப்பார்க்கவேண்டும்; கடற்கரைக்குப் போகவேண்டும் என்று சொன்னீர்களே. வேலைக்காரனிடம் சொல்லி வண்டி சித்தம் செய்யச்சொல்கிறேன். அதில் ஏறிச்சென்று வேடிக்கை பார்த்துவாருங்கள்” என்று அவர்களை வெளியேற்றத் தந்திரமாய்க் கூறினாள். தனது புதல்வியின் சாமர்த்தியமான வார்த்தையைக் கேட்ட ருக்மிணி பூரித்துப் புளகாங்கிதமடைந்தாள். மோட்டார் காரில் ஏறிச் செல்லவேண்டுமென்று ஆசைகொண்டுள்ள அவர்கள் அதற்கிணங்கினார்கள். உடனே ருக்மிணி தமதாளையழைத்துப் பெரிய பஸ் ஒன்று வாடகைக்கு அழைத்துவரச்செய்து அதில் இவர்களை ஏற்றித் தந்திரமாக அனுப்பிவிட்டாள். பிறகு பாட்டுக்கச்சேரி வெகு இனிமையாக நடந்தது. எல்லோரும் “ஆகா! ஆகா!” என்று தலையையாட்டித் தாளம் போட்டபடியே இருந்தனர்.

மணி 6-30 ஆய்விட்டது. அந்த ஜனக் கும்பலில் ராஜேஸ்வரியின் கண்ணுக்குத் தாமோதரன் தென்படவில்லை. அவள், “அவர் இருக்கின்றாரோ போய்விட்டாரோ தெரியவில்லையே? பாட்டுக்கச்சேரி சமயத்தில் எல்லோரும் ஒருமித்திருக்கிற தருணத்தில் நாம் அவரைத் தனித்துக் கண்டால் தானே உண்டு. இத்தருணம் தட்டினால் இனி ஏது? என்ன செய்வேன்?” என்று யோசித்துக்கொண்டே மேன்மாடிக்குச் சென்றாள். எல்லோரும் கச்சேரியிலிருப்பதால் அங்கு காலியாகக் கிடந்தது. மாடியில் பெரிய ஹாலிலுள்ள ஜன்னல் வழியாக வீதியை நோக்கினாள். வீதியிலும் யாருமில்லை. யாரேனும் பணியாள் இருந்தால் ஜாடையாக விசாரித்துக் கொள்ளலாம் என்ற யோசனையால் பார்த்தும் வீணாய் விட்டது. அவள் பெருமூச்செறிந்தபடியே அந்த மாடியின் பின்கட்டு ஹாலையடைந்தாள். அங்கு தான் நாடிவந்தவர் பெருத்த யோசனையில் ஆழ்ந்தபடியே முகவாட்டமடைந்து நாற்காலியில் சாய்ந்திருந்ததைக் கண்டதும் வியப்பினால் அசைவற்று நின்றுவிட்டாள். “அருகில் ஓடி அத்தான் என்று அன்பாயழைக்கலாகுமா!” என்று எண்ணுகிறாள். பின்னும் யாரேனும் கண்டுவிட்டால் மோசமாய்விடும் என்று எண்ணி முன்சென்ற ஹாலில் நுழைந்தாள். அங்கு போட்டிருந்த மேஜையில் வைக்கப்பட்ட பேனாவைக் கொண்டு சிறிய துண்டுக் கடிதத்தில்,

“அத்தான்! உடனே நமது வஸந்த தோட்டத்துப் பளிங்கருகில் வந்து தாங்கள் என்னைச் சந்திக்கவும். தாமதம் வேண்டாம்.

அன்பான

ராஜேஸ்வரி.

என்று எழுதி அதில் தனது கைவிரலின் மோதிரத்தை வைத்து நன்றாக மடித்து அதைவீசித்தாமோதரனிருந்த இடத்தில்விழும்படி

எறிந்துவிட்டு மறைந்து நின்று அதைஅவன் எடுத்துக்கொண்டானு என்று பார்த்தாள். உட்கார்ந்திருந்த தாமோதரன் திடுக்கிட்டு அதை எடுத்துக்கொண்டான். இதைத் தூரவிருந்து பார்த்த ராஜேஸ்வரி மகிழ்ந்தவளாய் இறங்கிப் போய்விட்டாள். அவள்தான் தோட்டத்திற்குப் போவதை யாரும் சந்தேகிக்காவண்ணம் செல்லும் வழியை எதிர்பார்த்திருந்தாள்; எல்லோரும் மெய்மறந்த ஆநந்தத்திலுல் மூழ்கிக் கிடப்பதையறிந்தாள். உடனே தன் தாயிடம் சென்று "நான் தோட்டத்திற்குச் சென்று கை கால் சுத்தி செய்துகொண்டு வருகிறேன்! என்னைத் தேடவேண்டாம்" எனக் கூறிவிட்டு மெல்லத் தோட்டத்தையடைந்து கடிதத்தில் குறித்திருந்த இடத்திற்குச் சென்றுள்.

அப்பொழுது மணி எழடித்து விட்டது. இருள் எங்கும் சூழ்ந்துவிட்ட தென்றாலும் நிலவின் வெளிச்சம் இலைகளுக்கிடையே நன்றாக ஜொலிக்கின்றது. அழகே உருக்கொண்ட தெனும்படி உருவமமைந்த ராஜம் ஒரு பளிங்காசனத்திலமர்ந்து "அத்தான் கடிதத்தைக் கண்டு வருவாரோ வரமாட்டரோ! ஒருகால் வராமலிருந்துவிட்டால் என்ன செய்வது? அல்லது கச்சேரி கலையும் சமயத்திற்குச் சரியாக வந்தால் யாரேனும் சந்தேகிக்கக்கூடுமே! பிறர் பார்த்துவிட்டால் என்ன செய்வது?" என்று எண்ணியபடியே வழிபார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

அத்தருணம் தாமோதரன் இவளெதிரில் வந்து நின்றுன். ஆகா! இவனைக்கண்ட ராஜம் திங்களைக் கண்டு மலரும் ஆம்பல் போல மகிழ்ச்சியே மயமாய் மாறியவளாய், சடக்கென்று தாமோதரன் காலில் முகம் பதியும்படி பணிந்து "அத்தான்! நமஸ்கரிக்கின்றேன்" என்று கூறி எழுந்தாள்.

அவளுடைய கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட தாமோதரன் பூரித்தும் வியந்தும் பெருமூச்செறிந்தும் நின்றுன். "ஆகா! இந்த ஆகாயத்தில் தோன்றும் திங்களை நிகர்த்த இவளுடைய முகமானது என்னை மீண்டும் உறுதியற்றவனுக்கி விடுகின்றதே! ஆகாயப் பரப்பைப்போன்ற நீல உடையும், சுடர்விட்டு எரியும் நக்ஷத்திரங்களைப் போன்ற வைர ஆபரணங்களும், மதிமண்டலத்தைப்போன்றமுகாரவிந்தமும்,மேகத்தைப்போன்றகருங்கூந்தலும், இந்த ஆகாயமே இரு உருக்கொண்டதோ, அல்லது பூமியாகியகண்ணுடியில் ப்ரதிபிம்பிக்கின்றதோ, அல்லதுகீழிறங்கிவிட்டதோ,என்றுஐயுறத்தக்க விதமாயிருக்கின்றனவே! அடடா! இவளுடைய சிகைமுதல் நகம் வரையிலுள்ள உறுப்புக்களான ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை விளக்குவதுபோல் தோன்றுகின்றதே! தடாகத்திலுள்ள கெண்டை மீன் என்கிற ஒருவகை மீனுனது

தண்ணீரில் துள்ளிக்குதித்துலாவும் சக்தி வாய்ந்தது. அதேபோல் கெண்டை மீனுக்கொப்பாயுள்ள இவளது விழியானது எத்தகைய விஷயத்திலும் நொடியில் துள்ளிப்பாய்ந்து அதனைக் கூர்ந்து கவனித்துத் தன்னிடம் பதியவைத்துக் கொள்வதுடன் அன்பென்னும் இரையைப் பூர்ணமாக விழுங்கிவிட்டு மெல்ல அசைவது போலவும் மருண்டு பார்க்கின்றதே! மற்றும் சாந்தம் என்னும் தடாகம்போல் அவளது விழி காணப்படுவதில் அவள் பொறுமைக்குப் பொக்கிஷமென்றும் தோன்றுகின்றது. அவளது நீலவிழியின் நுண்ணிய பார்வையினால் அவளது கற்பாகிய ஜோதி பளீர் பளீர் என்று பிரகாசிக்கிறது. அக்கற்பென்னும் பூஷணத்தை வைத்துப் பத்திரமாக பூட்டுவதும் திறப்பதும்போல் அவள் இமை கொட்டுகிறாள். கற்பு, பொற்பு, பொறுமை, நுண்ணறிவு, அன்பு முதலிய அரிய பொருள்களை வைத்துப் பாதுகாக்கும் கண்ணாகிய பெட்டியைத் கள்வர்கள் கவராமலிருக்க இமைகளாகிய சேவகர்களைத்தயாராக அருகில் வைத்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகின்றது. அச்சேவகர்கள் பகைவரை வாட்டத்தயாராக வில் வைத்திருப்பது போல் புருவங்கள் தோன்றுகின்றன. மற்றும் அவள் புருவங்கள் இந்த பொக்கிஷமுள்ள இடத்திற்கே பகைவரை அண்டவிடாமல் வழிமறுத்துள்ள வேலிபோலும் தோன்றுகின்றன. அவளது நாசியானது பகைவரை அதஞ்செய்யும் பீரங்கி வெடிகளைத் தாங்கிநிற்கும் குழாயைச் சாற்றி வைத்திருப்பதுபோன்ற பாவனையில் அமைந்து இருக்கின்றது. அவளது செவிகள் இத்தகைய பொக்கிஷத்தை வகித்துள்ள கோட்டைவாசல் போலத் தோன்றுகின்றன. முல்லையரும்பு போன்ற பல்வரிசையும், பட்டு ரோஜாவைப் போன்ற அதரமும், வெள்ளைரோஜாவைப் போன்ற கன்னமும், தோட்டக்காவலன்போன்றநாக்கும்,புஷ்பத்தின்மணம் போன்ற சுவாசமும் தேன்போன்ற வசனமும்சேர்ந்து பார்வைக்கு ஒரு புஷ்பத் தோட்டத்தைப் போல் தெரிகிறது. கரேலென்ற கருமணல் போன்ற கூந்தலை உற்றுக் கவனிப்பின் கரேலென்ற கடலின் ஒரு பாகமாகிய தீவில் இக்கோட்டை அமைந்துள்ளது போலும் என்று கருத இடந்தருகிறது. விசாலமான நெற்றியானது கடலின் துறைமுகக் கரைபோலும் தோன்றுகிறது. அக்கடலில் தோணிகளும் சிறிய படகுகளும் போவதுபோல் தலையிலுள்ள புஷ்பம் காற்றில் அசைவதும் ஆபரணங்கள் தரித்திருப்பதும் காட்டுகின்றன. இடைக்கு மேலுள்ள பாகத்தின் பாரத்தை மின்னல் போலுள்ள இடையானது தாங்குமோ தாங்காதோ என்ற ஐயத்தினால், இதைப் பூட்டியிருக்கின்றனர் போலும் என்று கருத ஒட்டியாணம் நெளியும் இடையில் பிரகாசிக்கின்றது. ஆகா! இத்தகைய எழில் நலமமைந்த மடந்தையை இனிக் காண்பதற்கும் பாக்கியமற்றுவிட வேண்டிய நிலைமை நமக்கு வந்துவிட்டதை

எண்ண என்னை மீறிய துயரம் என் மனதைப் பாதிக்கின்றதே! என்ன செய்வேன் ? இவளது தரிசனத்தை விட்டு நாம் எவ்விதம் பிரிவது?'' என்று யோசித்தபடியே பதிற்பேசாதுநிற்பதைக் கண்ட ராஜம் அன்பு ததும்பிய பார்வையுடன் சிறுநகைசெய்து, "என்ன அத்தான்! பெரிய யோசனை செய்கிறீர்களே? என்னுடன் பேசுவதற்குத் தமக்கு இஷ்டமில்லையா? உட்காருங்கள்." என்று கூறினாள்.

தாமோதரன்:—ராஜேச்வரி! உன்னோடு பேச எனக்கு இஷ்டமில்லை என்பதை மற. ஈசனுக்கும் உன் பிதாவுக்கும் இஷ்டமில்லை என்று சொல்லுவாய். ராஜம்! உன் கண்ணில் நான் படலாகாதென்று எத்தனை ஜாக்கிரதையாயிருந்தும் என்னை நீ பார்த்துவிட்டாயே; அதுவே எனக்கு வருத்தமாக இருக்கிறது. ராஜம்! இன்றே நமது சந்திப்பின் கடைசிதினம் என்பதை நினைக்க எனக்கு மிகவும் துக்கமேலிட்டுப் பேசுவதற்கு வாய் திறக்க மாட்டாமல் தொண்டையை அடைத்துக் கொள்கிறது. அதனால் பேசாமல் நிற்கிறேன்—என்று மேலே சொல்வதற்குள் அவன் தொண்டையில் வருத்தம் அடைத்துக் கொண்டது. அதனால் அவன் தலைகுனிந்து நின்று விட்டான். கண்களில் நீர் பெருகியது.

இவனது நிலைமையைக் கண்ட ராஜேச்வரி திடுக்கிட்டு வருந்தியவளாய் " ஆ! என்ன இது! அத்தான்! அத்தான்! தாங்கள் சொல்லும் வார்த்தை என் இருதயத்தைத் துளைக்கின்றதே! என்ன காரணத்தினால் தாங்கள் இவ்விதம் கூறுகின்றீர்கள்? ஏன் கண்ணீர் வருகின்றது! அத்தான்! விளங்கக்கூறலாகாதா!" என்றாள். இதற்குள் தாமோதரன் தழதழத்த குரலில் "ஆ! ராஜம்! இனி என்னை நீ உன் மனதில் இதுகாறும் எண்ணியிருந்ததுபோல் எண்ணாதே! என்னை அன்னியனாக எண்ணிவிடு. மனத்தை உன்வழியிலிருந்து திருப்பிக்கொள். ராஜம்! ராஜம்! நான் சென்று வருகிறேன் " என்று மீண்டும் கண்ணீர் உதிர்த்தான்.

இதுகேட்ட ராஜம், பதறியவண்ணம் "ஆகா! அத்தான்! என்ன சொல்கிறீர்கள்? ஐயோ! இதுகேட்கவோ நாம் சந்தித்தோம்? ஏன் தாங்கள் இவ்விதம் பேசுகின்றீர்கள்? தங்கள்பால் அடியாள் ஏதேனும் அபராதம் செய்துவிட்டேனா! அத்தான்! அவ்விதமிருப்பின் தாம் மன்னித்துப் பொறுக்கலாகாதா! தாங்கள் என்ன காரணத்தினால் இவ்விதமான வார்த்தை சொல்கிறீர்கள்? நமது சந்திப்பு இதுவே கடைசிதரமென்பதன் கருத்து எனக்கு விளங்கவில்லையே! என் தந்தையின் மாதிரியை எண்ணி இவ்விதம் சொல்கின்றீர்களா? அத்தான்! வருந்தாதீர்கள். உங்கள் மனம் ஏன் தவிக்கின்றது? என்னைத்தங்களை மறக்கும்படியாகக் கூறவேண்டிய காரணம் யாது? என் உயிர் இவ்வுடலிலுள்ள மட்டும் தம்மைக் கனவிலேனும் நான் மறக்கக்கூடுமோ? அடியாளை விலக்கும்படியான காரணம்

என்ன உற்றது? நாம் பாலியம் முதல் பழகியநட்பு குன்றிவிடுமோ? அத்தான்! காரணமுரைக்க வேண்டும்" என்று மன்றாடிக் கேட்டாள்.

தாமோதரன்:—ராஜேஸ்வரீ! நீ கேட்பது வியப்பாக இருக்கின்றதே! நமது பிரியம் ஆதியிலிருந்ததைத் தற்போது எண்ணிப் பயன் யாது? நன்ருகப் படித்துள்ள பாவையாகையால் உனக்கு யான் கூறவேண்டுவதொன்றுமில்லை. நீ உன் தாய் தந்தையின்கீழ் அடங்கியுள்ளவள். அவர்களின் இஷ்டம்போல் நீ நடக்கவேண்டியதேயன்றி அன்னிய நாட்டாரின் போக்காக சுயேச்சை வகித்து நடப்பது அழகாகாது. நீ இவ்விடத்தில் தனித்து என்னுடன் பேசுவது நம் ஜாதிக்கு விரோதமானதென்பதை நீ யறியாதவளன்று. நமக்குள் உதித்த பிரியத்தை மாற்றவேண்டும். உன் மனமானது என்னிடத்தில் எவ்விதமிருக்கின்றதென்பதை நானறிவேன். நான் உன் கண்ணில் படலாகாது; பட்டால் அதனிமித்தம் உன் மனம் தவிக்கும் என்பதை யுணர்ந்தே நான் உன்னைக் காணுமலே மறைந்திருந்தேன். எனக்குக் கடிதமனுப்பியதைக் குறித்து உன் அன்பின் திறத்தை அதனுல் சிறிது அறிந்து மகிழ்கிறேன். இருந்தாலும் அந்தக் காரியத்தைப் பிறர் கண்டால் மெத்த இழிவாகுமென்பதை நீ அறியாயோ? உன்னை நான் கடிந்துகொள்வதாக நீ எண்ணுதே. ராஜம்! உன்னைக் கண்டு உன்னேடு பேசாது செல்வதற்கு என் மனம் எவ்விதம் துடிக்குமோ அதேபோல உன் மனமும் இருக்கும் என்பதை அறிந்தே நான் முதலில் இவ்விடத்திற்கு வருவதற்கே மயங்கினேன். நேற்று உன் தந்தைக்கு நான் நமஸ்காரம் செய்தேன்; விசாரித்தேன். அப்போதும் அவர் என்னுடன் ஒருவார்த்தையும் சொல்லாமல் வர்மமே பாராட்டினுர். உன்னை மணந்து சுகமாக வாழ்வதற்கு வேறு புண்ணியசீலன் காத்திருக்கிறுன். ஆகையால் நீ உன்பழைய எண்ணங்களை விட்டுவிடு. ராஜம்! உனக்கு அருகமுள்ளவன் யானன்று! நீ இதனுல் வருத்தமுருதே. என் வாழ்நாளில் உன்னைக் காதலித்துக் கலிதீராத பாவியாய் விட்டேன். இச்செனமத்தில் வேறு மணம் என்பதே செய்துகொள்வதில்லை என்று தீர்மானித்து விட்டேன். நான் துறவுபூண்டு அதன்படி நடக்கத்தயாராக ஆய்விட்டேன். முதலிலிருந்தே நீயும் நானும் நேசியாமலிருந்தால் மெத்த சந்தோஷமாக இருக்கும். அப்போது மாமா விருந்த நிலைமையில் நமது பிரியம் வளர்பிறைபோல வளரும் என்று எண்ணினேன். தற்போது அது வீணுயிற்று. ராஜம்! நான் எவ்விதமேனும் காலத்தைக் கழிக்க எனக்குத் திறமையுண்டு. நீயோ கன்னிகை. அதிலும் ஒருவர்க்குக் கீழ்ப்படிந்தவள்; அவர்கள் மனங்கோண நடக்காதே. நீ உன் மாதா பிதாக்களின் மன மகிழ நட. நான் 'இனிஇதுவே கடைசிசந்திப்பு' என்று சொல்லியதற்குக் கார

ணங்கேள்—நான் இவ்வூரிலிருக்கப் பிரியப்படவில்லை. எனது சினேகிதன் ரங்கூனிலிருக்கிறான். அங்கு ஒருவேலையும் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகையால் நான் கூடிய சீக்கிரத்தில் ரங்கூன் சென்று விடப்போகிறேன். பிறகு என்சவமும் இவ்விடம் கிடைக்காது. ராஜம்! நான் சென்றுவிடும் செய்தியை உனக்குக் கடித மூலமாய் ரங்கூன் சென்ற பிறகு தெரிவிக்கலாமென எண்ணியிருந்தேன். அதற்குள் உன் கடிதத்தைக் கண்டதும் என்மனம் தாங்கவில்லை. உன்னைக் கடைசிதரம் பார்த்துவிட்டு உன்னிடமும் சொல்லிக்கொண்டு இரவே வீட்டுக்குப் போவதென்று இங்கே வந்தேன். ராஜம்! நான் சென்றுவருகிறேன். நான் உயிருடன் இருப்பதாக நீ எண்ணினால் உன் மனத்தின் பழைய எண்ணத்தை மாற்ற முடியாது. ஆகையால் இறந்து விட்டதாகவே எண்ணுவாய். உன் க்ஷேமத்தைக் கோரியே நான் வெளியூருக்குச் செல்கிறேன். நீ என் பொருட்டாகக் கஷ்டப்படுவதாக இருந்தால் உன் க்ஷேமத்தைக் கருதியே நான் உயிரையும் மாய்த்துக் கொள்கிறேன். நீ அப்புறம் உன் மனதைத் தேற்றிக்கொண்டு உன் தாய் தந்தையர் சொற்படிநடந்து கொள். அவர்கள் மகிழ்வது மக்களாலன்றோ! அவர்களைக் களிப்பிக்கும் பொருட்டு நீ உன்னுடைய மனதில் உள்ளதை விலக்கி விட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கும் புருடனை மணந்து சுகமாக வாழ்ந்துவா. உனது சுகத்தைத் தூரவிருந்து காதினால் கேட்பதே எனக்கு மெத்த களிப்பாகும். ராஜம்! வீடோ கலியாணவீடு; மனிதர்களோ அளவற்றவர்கள் வந்திருக்கிறார்கள். கச்சேரியும் முடியும் சமயமாயிருக்கும். நாம் இவ்விடம் தனித்திருப்பதை யாரேனும் கண்டு விடுவார்களேயானால் மெத்த விபரீதமாய்விடும். ஆகையால் நான் சென்றுவருகிறேன். ராஜம்! ராஜம்! உன்னுடைய காதல் என்னும் கயிற்றால் கட்டப்பட்டயான் அக்கட்டை அவிழ்க்கமாட்டாது செல்கிறேன். என்னை மறந்துவிடு"—என்று கூறும்போதே அவன் நா தழுதழுத்தது. உடனே அவன் அங்கு அமைக்கப்பட்டிருந்த பளிங்காசனமொன்றில் சாய்ந்தான்.

இவனுடைய பிரசங்கம் போன்ற வார்த்தையைக்கேட்ட ராஜம் இன்னதென்று விவரிக்க இயலாத விதமான விசனத்தையடைந்து கண்ணீர் பெருகியவாறு "அத்தான்! அத்தான்! இதென்ன இது! தங்கள் வாயினின்றும் இத்தகைய சொல்லா வருவது? தங்களை மறப்பதற்கு என் மனம் சம்மதிக்குமா? நாம் ஆதி முதலிருந்து பழகியதன் மாதிரி மறக்கக் கூடியதா? அத்தான்! தங்கள் தாய் தந்தைபால் கொண்ட துவேஷத்தினால் என் தந்தை தங்களிடமும் அவ்விதமிருக்கின்றார்களே யன்றி, உண்மையாகத் தங்களிடம் என் தந்தைக்குப் பிரியமே இருக்குமென நினைக்கிறேன். தாங்கள் அவர் பேசாமல் இருப்பதைக் கண்டு

இத்தனை தீர்மானமும் முடிவு செய்துவிடலாமா? தாங்கள்மட்டும் என்னை மறக்கமுடியாமல் இவ்விதமே இருக்கப்போவதாகச் சொல்கிறீர்களே! அந்த மனோபாவம் எனக்குமட்டும் கிடையாதா? என் அன்பான அத்தான்! நாம் தனித்துப் பேசுவது தப்பிதமென்பதை நான் அறியாதவளன்று. ஆயினும் தங்களைச் சந்தித்து நமஸ்கரிக்க வேண்டுமென்று என் மனம் தூண்டியதால் இவ்விதபிசகான காரியத்தையும் செய்யத் துணிந்தேன். அத்தான்! தாங்கள் எண்ணுவதுபோல் ஒருநாளும் நடக்காது. ஈசன் நமக்குள் இத்தகைய பரஸ்பர அன்பை அளித்திருப்பதை வீணாக்கார். அவர் நமக்கு மணம் செய்துவைப்பார் என்றே எண்ணுகிறேன். தாங்கள் கூறுவதையெல்லாம் இனி நிறுத்துங்கள். அத்தான்! நாம் ஒருவரையொருவர் உண்மையாக நேசித்து மனதைச் செலுத்தியபிறகு மற்றோரின் நிர்ப்பந்தத்தால் வேறொருவனுக்கு இக்கரத்தினால் மாலையிட இந்த என்மனம் சம்மதிக்குமோ? என் பெற்றோருக்கு என்னிடம் சந்தோஷமுண்டென்பதை யானறிவேன். எனினும் அவர்களும் மகிழ்ந்து மக்களும் மகிழ்வதே இன்பமேயன்றி ஒரு சார்பில்மட்டும் மகிழ்ச்சியிருந்தால் அது இன்பமாகுமா? அத்தான்! என் வாழ்நாளில் நான் மகிழ்ச்சியடைந்து வாழ்வதற்குப்பிராப்தமிருப்பின் அது, தம்மை மணப்பதேயாம். இல்லையேல் சற்று முன் தாம்கூறிய வார்த்தையைத் திருப்பிக்கொள்ளலாம். மனத்திற்கு உறுதி என்பது ஒரு வஸ்துவேயன்றிப் பல வஸ்துவில்லை. அவ்வுறுதி ஓரிடத்தில் வேரூன்றிய பிறகு மற்றவிடத்தில் அது எவ்விதம் ஊன்றி நிற்கும்? அத்தான்! நான் இம்மையில் தம்மை யல்லாது வேறு ஒருவரையும் மணக்கமாட்டேன். இது திண்ணம். என மன உறுதியை மாற்றுவதற்கு யாராலுமாகாது. அத்தான்! தாங்கள் அதைரியப்படவேண்டாம். இதற்காக ஊரைவிட்டுப் போக வேண்டாம். தங்கள் மனத்திற்கு வருத்தமே வேண்டாம்" என்று கூறினாள்.

தாமோதரன் மறுத்து, "ராஜம்! என் மனதிற்கு நான் இனிமேல் வருத்தத்தைக் கொடுக்கப் போவதில்லையே! என் மனம் உறுதியாய்விட்டது. என் தாய் தந்தையின்மேல் த்வேஷத்தால் என்மேலும் த்வேஷம் பாராட்டவேண்டுமா! எனக்கவர்கள் உண்மையான தாய் தந்தையர்களா! வளர்ப்புத் தாய் தந்தை என்பதை யறிந்தும் அவர்களுக்கு என்மேல் பிடித்தமில்லாதிருக்க, நீ கூறுவது பொருந்துமா! தாயற்ற அநாதைகளாகக் கிடந்த என்னையும் என் சோதரியையும் புண்ணியத்திற்காக வளர்த்தவர்கள் என்பதை நீயுமறிந்த விஷயந்தானே! என் சகோதரி மஞ்சுளவல்லியை ஒரு புண்ணியவான் காப்பாற்றினார். என்னை இவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அவர்களால் வளர்க்கப்பட்ட என்மேலேயே இவ்விதம் கடுமையான பகைமை பாராட்டும்போது அவர்களுடைய

சொந்தப் பிள்ளையாக இருந்தால் கேட்கவேண்டுமா?" என்று முடிப்பதற்குள், ராஜம் வியப்போடு, "ஆகா! அத்தான்! தாங்கள் அத்தையின் சொந்தப் புத்திரரல்லவா? அந்த விவரம் எனக்கிது பரியந்தம் தெரியவராதே! தமக்கு சகோதரி யொருத்தியிருப்பதாகக் கூறுகிறீர்களே! அந்தம்மாள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் தங்களுடைய பந்துக்கள் வீட்டிலா இருக்கின்றார்கள்? ஆகா! நான்சொந்த அத்தான் என்றல்லவா எண்ணி நம்பி இருந்தேன். தாங்கள் அத்தையின் வளர்ப்புப் புத்திரரா! தங்களுடைய பெற்றோர், உற்றோர் முதலியோர் எங்கே? என் அத்தை தமக்கு சொந்தக்காரர்களா, அன்னியர்களா!" என்று பதறப் பதறக் கேட்டாள்.

தாமோதரன்:—ராஜம்! என்னுடைய சரிதையை நானே முற்றும் விவரமாக அறியமாட்டேன். ஏதோ எனக்குத் தெரிந்த சில விஷயங்களையும் சிலர் உண்மை என்கிறார்கள்; சிலர் தவறு என்கிறார்கள். ஆகையால் அதன் உண்மையைப்பற்றி எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்தமட்டில் உன் அத்தை எனக்கு உறவில்லாத அன்னியரென்றே நினைக்கின்றேன். ராஜம்! அந்தக் கதையெல்லாம் இப்போது வேண்டாம். நாம் நெடுநேரமாகத் தனித்திருப்பது பிசகு. நான் செல்கிறேன். இனிமேல் என்னை அறவே மறந்துவிடு. நான் உனது சொந்த அத்தானுமல்ல வென்பதையும் உன் க்ஷேமத்தைக் கோரியே தெரிவித்துவிட்டேன். ஆகையால் என்னுடைய நினைவை முற்றும் மறந்து உன் பெற்றோரின் இஷ்டப்படியே எந்த உத்தமனையேனும் மணந்து சுகமாக வாழ்வாய். நான் உத்தரவு பெற்றுக் கொள்கிறேன். உன்னை மீண்டும் பார்க்கும்படியாகக் கொடுத்து வைத்திருந்தால் நான் பாக்யவந்தனாவேன். நான் ரங்கூன் செல்வதையும் இன்றே சொல்லிக்கொள்கிறேன். **என் வாழ்நாளின் இன்பம் இன்றோடு முடிவடைந்து விட்டது.** ராஜம்! நீ படித்ததற்கு அடையாளமாக மேனாட்டின் முறையைக் கைப்பற்றாதே! தாய் தந்தையின் மனப்படி நடந்து பண்டைய பழக்கத்தை யனுஷ்டித்து வா. மேனாட்டாரின் பழக்கத்திலுழன்று பல இடுக்கண்களுக்கும் இலக்காகிய செல்லப்பா, காந்தாமணி இருவரையும் பார்த்தாயா! பண்டைய வழக்கத்தை விடாது ஒழுகிய **(பத்ம சுந்தரன்) பத்மவல்லி சுந்தரன்** இருவரும் அடைந்த பலனையும் பார். ஆகையால் நாம் நம் ஜாதியின் முறைப்படி நடப்பதைவிட்டு அன்னிய ஜாதியாரின் வழக்கத்தை வைத்துக்கொள்வது அழகாகாது. ராஜம்! நான் உனக்கு ஆதியில் விளையாடிய சிநேகிதனே யன்றி உண்மையில் அன்னியனே யாவேன். என்னை இனி அன்னியனாக எண்ணுவதில் தடையே வேண்டாம். உன் அழகிற்கும், அந்தஸ்திற்கும், புத்தி விசாலத்திற்கும், படிப்பின் பாங்கிற்கும் தக்கவனை ஈசன் கூட்டிவைப்பார். கேவலம் பணிதரற்ற அநாதையாகவும், பணமற்ற பரதேசியாகவும் உள்ள என்

182841

நேசத்தை அறவே மறந்துவிடு. நேரமாய் விட்டது; நான் சென்று வருகிறேன். ராஜம்! உள்ளே செல்வாய். வீணாக என் பொருட்டு உனக்கு அபவாதம் நேரப்போகின்றது. என்றால் உனக்கு ஒரு விதக் கெடுதியும் நேருவது கூடாது. என்னைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. உன்னுடைய சுகமான க்ஷேமத்தைத்தான் நான் நாடுகிறேன். நீ சுகமாயிருப்பதாகக் கேட்பதே எனக்கு ஆநந்தம். உன்னுடைய க்ஷேம வாழ்க்கையே என் வாழ்நாளின் இன்பம். ராஜேஸ்வரி! உன்னை நான் ஒரே ஒரு வரம் கேட்கிறேன். அதாவது,—நீ என்னிடம் பிரீதிவைத்து நேசிப்பது உண்மையாகவிருந்தால் எனக்கு எந்த நேரத்திலோ,எப்போதோ, ஏதேனும் ஆபத்து நேருமாயின் நீ அதினின்றும் என்னைக் காக்கவேண்டும். அதுதான் நான் உன்னிடம்கோருவது. அப்போதும் உன்னை மணந்த கணவன் சம்மதித்தால்மட்டுமேயன்றி அவன் சம்மதமின்றேல் வேண்டாம். நான் சென்றுவரட்டுமா?"என்று ராஜேஸ்வரியைப் பரிதாபம் ததும்பிய பார்வையுடன் நோக்கியபடியே கண்ணீர் உதிர்த்தான்.

இதுகேட்ட ராஜம், "ஆ! அத்தான்! தாங்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் என்னவிதமான பதிலளிப்பது என்பதே எனக்குத் தெரியாமல் பிரமித்துவிட்டேன். நான் என்ன பேசுகிறேன் என்பது எனக்குத் தெரியவில்லை. தம்மை உண்மையாக நேசித்ததற்கு நான் தம்மைக் காப்பதா? அத்தகைய ஆபத்துதமக்கு யாது நேரும்? சகல நல்ல குணங்களும் அமையப்பெற்ற தமக்கு ஆபத்து நேருவதாவது? நான் தங்களை நேசித்தது உண்மையா அல்லவா என்பதை சர்வ வியாபியாயுள்ள சர்வேஸ்வரனறிவானேயன்றி எனக்குக் கூறுவதற்குத் தேவையில்லை. அத்தான்! தங்களுடைய உண்மையான பெற்றோரின் விவரத்தைத் தெரிந்தவரையில் எனக்கு உரைக்கலாகாதா? தங்கள் சகோதரி எங்கிருக்கிறார்கள்?" என்றாள்.

தாமோதரன்:—ராஜம்! அதனை ஏன் கேட்கிறாய்? நாம் இனி இங்கிருக்கலாகாது. என் சோதரியின் இருப்பிடம் எனக்கே தெரியாது. அவள் உயிருடன் இருக்கிறாள் இல்லை ஏன்பதையும் நான் அறியமாட்டேன். ராஜம்!நீ புஷ்பவதியாகும்முன் உன்னிடம் சமமாக உட்கார்ந்தும் உன்னைத் தீண்டியும் பேசிய யான் இனி தூர விலகுவதோடு ஊரையும் உன்னையும் அறவே விட்டும் செல்கிறேன். இதோ நீ கடிதத்தில் வைத்து வீசிய மோதிரம்; பெற்றுக்கொள். ராஜம்! ராஜம்! நான் மாமாவை நம்பி உன்மேல் கொண்டுள்ள காதலைத் தீயிட்டுப் பொசுக்கிவிடுகிறேன். உன்னை இனி சோதரியாக எண்ணுகிறேன். என் ராஜ ரத்தினமே! உனது அண்ணனாகிய யான் கடைசித்தரமாக உனது கரத்தைத் தீண்ட என் மனம் பறக்கின்றது. நான் கெட்ட எண்ணத்துடன் கூறுவதாக எண்ணாதே.

என் ராஜேஸ்வரீ! உன் கரத்தைத் தீண்டலாகுமா? என் கண்ணே! என்று கூறியவாறு கண்ணீர் காளுருய் ஓடும் வண்ணம் தனதிரு கரத்தினாலும் ராஜத்தின் இருகரத்தையும் எடுத்துத் தனது கண்களில் பதித்துக்கொண்டு "தங்காய்! ராஜம்! அநாதையாக என்னை ஈசன் பிறப்பித்தது போல அநாதையாகவே நான் செல்கிறேன். என் பிரிய ராஜம்! நீ வருந்தாதே. உன் வாழ்நாளின் இன்பத்தைக் குறைத்துக் கொள்ளாதே. அதிர்ஷ்டஹீனனுகிய நான் செல்கிறேன். உனது க்ஷேமலாபத்தை அண்ணுமுறை கொண்ட எனக்கு ஒரு வரி நீயேனும் சரி; உன் புருஷனேனும் சரி எழுதினுல் மெத்த சந்தோஷமாகும். இல்லையேல் அதுவும் என்னதிர்ஷ்டமென எண்ணுகிறேன். ராஜம்! கண்ணீர் உதிர்க்காதே. நேரமாய்விட்டது. இதோ இந்தக் கடிதத்தை நான் உனக்கனுப்பும் பொருட்டு முன்னமே எழுதி வைத்திருந்தேன். இதை நீ உனது சாவகாச வேளையில் படித்துக்கொள். பாவி என்னை மறந்துவிடு. கடிதத்தைப் படித்து வித்தியாசமாக எண்ணுதே. ராஜேஸ்வரீ! ராஜேஸ்வரீ! தாய் தந்தையின் மனங் கோணவைக்காதே. நிந்தையான பெயர் வாங்காதே. உலகம் மெச்சவாழ்வை நடத்திவா. நான் செல்கிறேன்" என்று கூறியவாறு கடிதத்தையும் மோதிரத்தையும் ராஜத்தினிடங் கொடுத்தான். ராஜேஸ்வரி அவற்றை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு எதுவும் பேசமாட்டாமல் கண்ணீர் பெருக நின்றபடியே "அத்தான்! தாங்கள் கூறிய புத்திமதியை ஏற்றுக் கொண்டேன். என்ருலும் தாங்கள் கூறிய ஒரு வார்த்தையை மட்டும் மாற்றிக்கொண்டேன். தம்மை என் தேகம் சாம்பலாகும் பரியந்தம் மறக்கமுடியாது. அதொருபுறம் கொழுந்துவிட்டு எரியவேண்டுவதுதான் என் தலைவிதி. அத்தான்! இனி எப்பொழுது தம்மைக் காண்பது? என்னறியாமையினுல் ஏதேனும் பிழைகள் செய்திருப்பின் மன்னித்துப் பொறுக்கவேண்டும். தாங்கள் எவ்விடத்திலிருந்தபோதிலும் மறவாமல் கடிதம் போடவேண்டும்" என்று கூறி அவன் பாதத்தில் பணிந்தாள்.

தாமோதரன்:—ராஜம்! ராஜம்! எல்லாம்வல்ல ஈசனை வணங்கு. அவனே சகல நன்மைகளையும் அளிக்கும் முதல்வன். எழுந்திரு.— என்று அவளது கரத்தைப் பற்றித் தூக்கி நிற்கவைத்து, "ராஜம்! நான் கடிதமெழுதுவதில் தடையில்லை. ஆனுல் அதனுல் உன் வாழ்நாளில் உனக்குக் கேடுநேரும். நீ எனக்கு எழுதுவதை பிறரறியமுடியாது. நான் விடுத்தால் யாரேனும் கண்டால் உனக்குத் துன்பம் சம்பவிக்கும். ஆகையால் அவ்வாசையை எதிர் நோக்காதே. முடியுமானுல் சந்தர்ப்பம் நோக்கிச் செய்கிறேன். எனக்கு உத்தரவளிப்பாய். என் ராஜம்! நேரமாய்விட்டது." என்று கூறி மீண்டும் அவள் கரத்தைக் கரமலரேந்தி, விழிமலர் பதித்து, சிரமலர் சூடிய பின்

கையில் பிடித்துக்கொண்டு “இனி என் கரம் மற்ற கரத்தைத் தீண்டாது. இதுவே கடைசிதரம்; நான் சென்று வருகிறேன். என் தங்கமே! பதிலில்லையா? என்னை உற்சாகத்துடன் அனுப்பமாட்டாயா? என் கண்ணே! ஏன் வருந்துகின்றாய்? வேண்டாமம்மா ராஜேஸ்வரீ! நமது நேசம் இது பரியந்தான் ஓங்கிற்று. இனி நீங்கிவிட்டது. என்று தேறுவாய் என் செல்வமே” என்று கூறு கையில் இவர்கள் முகத்திற்கு நேர் இடீரென்று ஒரு எலக்ட்ரிக்லைட் வெளிச்சம் பளிச்சென்று அடித்தது. இதைக்கண்ட இருவரும் நாகப் பாம்பை மிதித்தவர்கள்போல நடுநடுங்கிக் கைகளை விட்டு விலகிக் கொண்டு விளக்கின் ஜோதி வந்தவிடத்தை உற்றுக்கவனித்தார்கள். அந்தோ! அவ்விடம் நெருப்பு மழையைக் கண்களாகிய ஆகாயத்திலிருந்து பெய்துகொண்டு முறைத்தபடியே பல்லைக்கடித்துக்கொண்டு ஒரு உருவம் துடிதுடித்தபடி நின்று கவனிக்கவும்; மற்றொரு உருவம் ஒரு கையில் விளக்கும் ஒரு கையால் இவர்களைச் சுட்டிக் காட்டியபடியும் குத்தலான பார்வையுடன் நிற்கவும் கண்ட இருவருடைய நிலைமையும் எவ்விதமிருக்கும் என்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமோ? காதலரின் பரிபவத்தை அவரவர்கள் யூகித்தறிவது நலம் என விட்டுவிடுவதே உசிதம். உண்மைக் காதலின் வலிமையால் மனம் பிரியமாட்டாமல் துடிக்கும் நேரத்தில் அவர்களுக்கு இந்தப் பரிபவமும் வேண்டுமா! எல்லாம் ஈசன் செயல்.

பத்ம சுந்தரன்

ஸ்ரீமதி. வை. மு. கோதை நாயகி அம்மாள் எழுதிய துப்பறியும் நாவல். இதில் நமது நாட்டு வழக்கங்களை விட்டு மேனாட்டு நாகரிகத்தில் மூழ்குவதாலுண்டாகும் கேடுகளெல்லாம் நன்றாக விளக்கியுள்ளன. துப்பறிதல் மகா ஆச்சரியமாயிருக்கும். அழகிய சித்திரப்படங்களுடன் கூடியது.

விலை ரூ 2—8—0

நமது சந்தா நேயர்களுக்கு விலை ரூ 2



இனி என் கரம் மற்ற கரத்தைத் தீண்டாது. இதுவே கடைசிதரம் நான் சென்று வருகிறேன். என் தங்கமே! என்ன பதிலில்லையா! என்னை உற்சாகத்துடன் அனுப்ப மாட்டாயா!

28—பக்கம்.